LIFE OF
Shanmuganadha Kavirayar.

சண்முகநாத கவிராயர்

ஜீவிய விருத்தாந்தம்.

வெளியிட்டோர்:
K. C. A. வேதரத்தினம்,
தூத்துக்குடி.

Price Four Annas.] [விலை 4 அணா.

முகவுரை.

இறைவன் திருவருளால் நெல்லை ஜில்லாவில் உயர் குல தமிழ் வித்துவான்களில் பலர் ஆத்ம விசாரம் கொண்டவர்களாய் ரக்ஷணிய சமயம் யாதெனஆராய்ந்தனர். தாயினும் பெரிதும் தாயாவுடைய தம்பெருமான் தம்மைத் தேடும் தம்மடியவரை ஆட்கொள்ளா திருப்பாரோ! ஆட்கொள்வார் என்பதற்கு ஐயமில்லை, அவ்வாறு ஆட்கொண்ட முருக பக்தரில் சிறந்தவர்களில் சண்முகநாத கவிராயரும் ஒருவர். இவருடைய விருத்தாந்தம் எனது சிறு வயதிலேயே எனக்கு ஆத்ம விசாரம் தந்து தெளிவித்தது. இதை வாசிப்பவர் எவரும் மன நலம் எய்தி, தெய்வ திருவருளையும் ஆத்தும விடுதலையையும் பெறுவர் என்பது நிச்சயம்.

இறைவன் திருநாமம் மகிமைப்படுக.

அம்பாசமுத்திரம்.
1—3—'55.

இங்ஙனம்,
S. T. இரத்தினம்,

LIFE OF SHANMUGANADHA KAVIRAYAR.

சண்முகநாத கவிராயர்

ஜீவிய விருத்தாந்தம்

இரண்டாம் பதிப்பு, 1000. பிரதிகள்.

சாயர்புரம் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1954.

பொருளட்டவணை.

LIFE OF SHUNMUGANATHA KAVIRAYER

சண்முகநாத கவிராயர்

ஜீவிய விருத்தாந்தம்.

சண்முகநாத கவிராயர் தந்தையின் குணசீலங்கள்.

தென் இந்தியாவின் சிரம்போற் பொலிந்து, நிலவளம், நீர்வளம், கடல்வளம், மலைவளம் பொருந்தி, கிறிஸ்து சுவிசேஷ சூரியப் பிரபையால் அஞ்ஞானந்தகாரம் நீங்கிச் சத்திய பரிபாலனம் பரவத் தலைப்பட்டுச் செழிப்புற்று விளங்காநின்ற திருநெல்வேலி நாட்டின்கண் திருநெல்லை நகரத்திற்குக் கிழக்கே பதினெண் மைல் தூரத்தில் அணியாபரண நல்லூர் என்னும் ஓர் சிற்றூரில், வேளாளர்க் குலத்தில் பசுங்குடியாய்ப் பத்துச் சகோதர சகோதரிகளோடுகூடப் பிறந்து வளர்ந்து, கல்வி பயின்று, கடாக்ஷ வித்துவானாகி யொருவர் வசித்துக்கொண்டிருந்தார். அவரது நாமம் வயிரவநாத கவிராயர். அவர் நாவலரா யிலக்கியத்தில் தேறியிருந்தமையால், இலக்கணமுங் கற்றால் பொற்பூவுக்கு வாசமுண்டானாற்போல் பரிமளிக்குமென்று கருதி, திருநெல்வேலியில் பெயர்போன இலக்கண வித்துவான்களாயிருந்த ஏகநாயக ஓதுவார், முத்துக்குமாரசுவாமி ஓதுவார் என்பவர்களையடுத்து,

அவர்களிடம் பஞ்சலக்ஷணமுங் கற்று, இலக்கண இலக்கிய பாவலராயினர். சங்கரநயினார்கோவில் முதலிய இடங்களில் அஷ்டாவதானஞ் செய்ததினால் அஷ்டாவதானி யென்கிற பெயரும் பெற்றிருந்தார். விவசாயத்தொழிலில் மிகவும் திருத்தமுள்ளவர். "ஆலையில்லாவூருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை" யென்றாற்போல அக்காலத்தில் கிறிஸ்துமத உண்மை பட்டிக்காடுகளில் அறியப்படாதிருந்தமையால் இந்துமார்க்கங்களிலொன்றாகிய தமது சிவமார்க்கமே சத்தியமென்று நம்பி, அதில் பக்தி வைராக்கியமுள்ளவராய்ப் பாத்திய பூஜையும் எழுந்தருளப்பண்ணி யிருந்தனர்.

சண்முகக் கடவுளே தஞ்சமென்று இலை விபூதியும் அபயஸ்தமும் மேல் வேஷ்டியில் வைத்து முடிந்து, எப்போதுஞ் சுமந்துகொண்டிருப்பார். இரவில் தூங்கும்போது அப்பொக்கணத்தைக் கண்மேல் வைத்துக்கொள்வார். அதில் ஓர் மடக்கெழுத்தாணியும், செந்தூருக்கும், மூக்குக்கண்ணாடியுங் கூட இருக்கும். நாடோறும் பூசை முடிந்த உடனே ஆறுமுகக் குமரன்பேரில் இரண்டு பாட்டுப் பாடி, செந்தூருக்கு ஓலையில் எழுதி, ஓரிலை விபூதி சாப்பிட்ட பிற்பாடு போஜனஞ் செய்வது வழக்கம். மேலே சொன்னபடி இரண்டு பாட்டுப்பாடி எழுது முன்னாடி எழுத்தாணி கையிலெடுக்கிறதுமில்லை. கழுத்திலுந் தலையிலும்உருத்திராக்ஷந்தரித்திருப்பார்.

திருச்செந்தூருக்குப் போகும்போதெல்லாம் சமுத்திரஸ்நானஞ்செய்து, கோவிலுக்குட் போய், சுப்பிரமணிய தரிசனஞ்செய்து, கொடிஸ்தம்பத்தின் அருகே நின்று, தாம் பாடியிருக்கிற அடைக்கலச்சதகம், போற்றிமாலை முழுதும் வாசித்து ஸ்தோத்திரஞ் செய்துவிட்டுத்தான் வெளியே புறப்படுவார்.

பேசுகிற துரிதத்தில் கற்பனலங்காரத்துடன் பாட்டுப் பாடத் தக்க சமர்த்தர். செந்தில் குமரன்பேரில்தான் முக்கியமாய்ப் பாடிக்கொண்டிருப்பார். திருச்செந்தூர் யமகக் கோவை, கழுகாசலக்கோவை, செந்தூர்ச்சிலேடை வெண்பா, அடைக்கலச் சதகம், போற்றிமாலை முதலிய பெரிய பிரபந்தங்களும், அநேக விடு பாடல்களும் அக்குமரன்பேரில் பாடியிருக்கின்றார். கிறிஸ்துவேத பூமியாகிய கானான்தேச விலாசமென்னும் புஸ்தகத்திற்குப் பாயிரமாக அகவற்பா வமைத்து எழுதினவருமிவரே.

குலதெய்வங்கள்பேரிலும் அதிகப் பற்றுள்ளவர். சாதாரணமாய் மற்ற ஜனங்கள் ஆடுவெட்டிக் கோழியறுத்து, பொங்கிப் பொரித்து, வில்லடித்துக் கொட்டி முழக்கிக் கொடை கொடுக்கிறதுபோலல்ல. இவர் கொண்டாடும் வணக்கத்திற்குத் தேவதா பிரார்த்தனை யென்று பெயர். இவர் தெய்வங்கள் இராமநாதபுரத்தைச் சேர்ந்த மாரியூருக்குச் சமீபத்தில் தருவையென்னும் ஓரிடத்திலுள்ளன. அவைகளிற் பிரதானமான தேவதைக்கு வீரமாகாளி யென்று பெயர். அவளுடைய முன்னோடி பெயர் சங்கிலி வீரசாமி. இவருடைய இஷ்டன் பெயர் துஷ்டசாமி. இவர் உக்கிரகணநாதருடைய முன்னோடியாம். இவ்விரண்டு சாமிமார்கள் தான் முக்கியம். இன்னும் லாடசாமியும், பேச்சி, பிரமராக்ஷதை யென்னும் தெய்வங்களும், பவளாயி, குப்பாயி யென்னுங் கன்னிகளும் உண்டு.

இத்தெய்வங்களுக்கு வருஷத்தில் ஒருதரம் திசைநோக்கித் தேவதா பிரார்த்தனை செய்வார்கள். ஓர் வெள்ளிக்கிழமையைக் குறித்துக்கொண்டு, வயிரவநாத கவிராயர் சுயகுடும்பத்தார் எல்லாரும் ஒன்றுகூடி, ஒரு கலியாணம்போல்

அணியாபரணநல்லூருக்கு வந்து, அன்று பகல் முழுதும் விரதமாய்ப் பெண்டுபிள்ளைகள் முதலாய்ப் பலகாரமட்டும் புசித்துக்கொண்டிருந்து, சாயங்காலத்தில் சகலத்திராளும் ஸ்நானஞ்செய்து ஆசாரமாய் அவர் வீட்டு முற்றத்தில் பதினொரு பானை பொங்க விடுவார்கள். அதற்கெதிரே கூடத்தில் ஒரு கும்ப குடம் பூரித்து, அதன்மேல் மஞ்சள் பொடி பிசைந்து, அதனால் வீரமாகாளி அம்மன் ரூபம் வகுத்து, கண்மலர், வீரப்பல், முலைத்தள முதலிய தரித்து, மஞ்சளைபூசி, வஸ்திரமுடுத்து, புஷ்பமாலை சாத்தி, மேலே பூம்பந்தல் அமைத்து வெகு சிறப்பாயலங்கரித்து, பின்பு மற்றத் தெய்வங்களுக்கும் அக்கூடத்திலேயே அதற்குக் குறிக்கப்பட்ட இடங்களில் இளநீரைச் சீவி வைத்து, அதற்கு மாலை சாத்தி யலங்கரித்து வைப்பார்கள். பின்பு பொங்கல் சாதத்துடன் சமைத்த அநேக வகை கறி பதார்த்தங்களையும் அத்தெய்வங்களுக்கு முன்பாக இலைபோட்டுப் படைத்து, தேங்காயுடைத்து, வாழைப்பழங்களுடன் யதேஷ்டமாய்ப் படைப்பதுமன்றி, வடைப் பலகாரஞ் சுட்டு, கயிற்றில் கோத்து, வடைமாலைசாத்தி, நைவேத்தியஞ்செய்து, தீபா ராதனை பண்ணுவார்கள். இவர்களெல்லாருஞ் சைவர்களா கையா லிந்தச் சமயத்தில்மட்டும் அத்தெய்வங்களும் சைவமா யிருக்கின்றன; ஆயினும் சங்கிலி வீரசாமிக்குக் கட்டமுதும் சுட்ட கருவாடும், சாராயமும் இன்றியமையாததினாலே, அவைகளைத் தூர ஓரிடத்தில் தயார்செய்து வைக்கும்படி ஓர் அசைவனைச் சட்டங்கட்டியிருக்கும். அந்த இடத்திற்போ யதற்குத்தீபங்காட்டும்போது கோவரத்தாடிபேரில் ஆவேசம் வரும். வந்த உடனே கூடத்தில் வந்து அந்த அம்மனுக்கு முன்பாக உட்கார்ந்து ஆடிக்கொண்டிருப்பார். இந்த அடிமை கள் எல்லாரும் சண்முகக் கடவுள்பேரில் பக்தி செய்கிறவர் களாகையால் இச்சாமிகளும் அக்கடவுள்பேரில் பக்தியுள்ள

வர்களாய் சுப்பிரமணிய சுவாமி பேரில் திருப்புகழ் வகுப்பு முதலிய ஸ்தோத்திரப் பாடல்களைப் பாடும்போது மிகவும் ஆனந்தமாய் ஆட்டங்கொண்டு, அங்கு நிற்கிறவர்களெல்லா ருக்கும் வாழ்த்தி வரங்கொடுக்கிறது வழக்கம். யாருக்காவது பிசாசு பிடித்திருந்தால் அதுகளைத் துரத்தி, எல்லாருக்கும் விபூதிகொடுத்து முடிந்த பின்பு சுவாமி ஆலயத்துக்கு எழுந் தருளிவிடுவார். அப்புறம் எல்லாரும் அவ்விடத்தில்தானே பந்தி யுட்கார்ந்து படைப்பன்னத்தை யெடுத்துப் பரிமாறிக் கொண்டு போஜனஞ் செய்வார்கள். இக்குடும்பத்தார் ஒவ் வொரு கலியாணமும் நிச்சயிக்குமுன் கோவரத்தாடியை மட்டும் அவர்களிருக்கும் இடத்துக்கு அழைத்துக்கொண்டு போய் மேற்சொன்னபிரகாரம் கட்டமுதுமட்டும் வைத்து சங்கிலி வீரசாமி, துஷ்டசாமி யென்பவர்களை வரவழைத்து உத்தரவு கேட்டுக்கொள்ளுவார்கள். சாதகப்பொருத்தம் அவ்வளவாய்ப் பார்க்கமாட்டார்கள். இவர்கள் வேறு பிசாசு களை வைத்து வணங்கவும் கூடாது, குறிகேட்கவுங் கூடா தென்று அத்தெய்வங்கள் கட்டளையிட்டிருக்கின்றன. ஒரு சமயத்தில் வயிரவநாத கவிராயரைப் பார்த்து மேற்சொன்ன வகையாய் ஆடிக்கொண்டிருந்த சாமி, சண்முகநாதன் உன் னிடத்தில் குடிகொண்டிருப்பதால் நீயே யந்தச் சண்முக நாதனு யிருக்கிறு யென்று சொல்லி யத்தெய்வங்களும் இவ ருடைய பக்தியினிமித்தம் அவரைப் புகழ்ந்தன.

கடித்த பாம்பையானுலும் அடித்துக் கொல்வதைப் பார்க்க மனஞ் சகிக்கமாட்டாத அவ்வித கொல்லாவிரதம் பூண்டவர். தந்தை தாய் சொற்றவருர்; பொறுமையிற் சிறந்தவர்; பொல் லாப்பிற்குப் போகார்; பழிக்கு நாணுவார்; பாவத்திற்கஞ்சு வார். இத்தியாதி நற்குண நற்செய்கைகளும் அவரிடம் இயல் பாயமைந்திருந்தன. விவசாயத் தொழில்புரிந்து தம்மட்

டுக்குக் குறைவின்றி ஜீவனார்த்தஞ் செய்துகொண்டிருந்தார். கிருஷிக்குரிய பருவத்தோடு பயிர்செய்யும் சமர்த்தராகை யால் யாவரும் வியப்புறும்படி அக்கம் பக்கம் நிலங்களைப் பார்க்கிலும் இவர் நிலம் இரட்டிப்பாய் விளைந்துகொண் டிருந்தது.

வயிரவநாத கவிராயர் சந்ததியைத் தேவன் எடுத்தாண்டுகோள்வதற் கேதுவாக அவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போய் உத்தியோகம் பெற்றது.

ஏகபோகமாயிருந்த அந்த அணியாபரணநல்லூர்க் கிரா மத்தைத் தீர்வைப் பாக்கிநிமித்தம் கம்பெனி சர்க்காரால் ஏலம் போட்டபோது, வள்ளிநாயகம் பிள்ளை யென்றொருவர் ஏலத்தில் வாங்கிக்கொண்டு அவ்விடத்திற்கு வந்தார். அவர் தமது சொந்தத்தில் உழவிடை வைக்கவேண்டுமென்று யோசித்து யாரிடத்தில் நல்ல நிலமுண்டென்று விசாரிக் கையில் வயிரவநாத கவிராயருடைய நிலந்தான் நல்லதென்று சொன்னார்கள். உடனே யந்த நிலங்களைச் சொந்தத்திற்கு உழுது போடும்படி யுத்தரவுபண்ணினார். அதுவுமல்லாமல் வயிரவநாத கவிராயருக்குரிய மிளகுசெடி தோட்டத்திலும் தமக்கு வீட்டிற்கு முளைப்பிடிக்கும்படி ஆக்கியாபித்தார்.

இது விவரந் தெரிந்து வயிரவநாத கவிராயர் அந்தக் கிராம முதலாளியிடத்திற் போய்: ஐயா, எந்த நிலம் தங்களுக்கு வேண்டியதாயிருந்தபோதிலும் அந்த நிலம் பயிரிடப்பட்ட குடியானவனைக் கூப்பிட்டுக் கேட்காமல் அதை யெடுத்துக்

கொள்வது நியாயந்தானுவென்று பதபாகமாகக் கேட்ட போது, அம்முதலாளி, யார்? இந்த மனிதனை வெளியிலே தள்ளு என்று அதிகாரத்தோடு வெகு குரூரமாய்ச் சீறினர். அப்போது வயிரவநாத கவிராயர் என்னைத் தள்ள ஆள் வேண்டுவதில்லை; நானே போய்விடுவேன் என்று சொல்லி விட்டு வீட்டுக்கு வருகையில் பாடிய பாட்டு,

"பழுத்தமெய்ஞ் ஞானத் திருவடித் தாமரை பாடியன்பால்
தொழத்தெரி யாதசெந் தூர்த்தெய்வ மேகின் றொழும்பறியேன்
முழுத்தவெந் தீவினை வந்துவிட் டால்திரு முன்புவந்தே
அழத்தெரி யும்பின்னை யொன்றறி யேனின் னடைக்கலமே."

இப்பாட்டினால் அவரது பொறுமையும், முருகக்குமரன் பேரில் பூண்டிருந்த நம்பிக்கையும் முழுவதுமாய்த் தம்மை யவருக்கு ஒப்புவித்திருந்ததும் விளங்குகின்றது.

அவர் வீட்டுக்கு வந்து, இனி யிவ்வூரிலிருந்துகொண்டு மறுபடியும் அக்கொடிய மனுஷன் முகத்தில் விழிப்பது சரியன்றென்று யோசித்து, உடனே அவ்வூரைவிட்டுப் புறப் பட்டுத் திருநெல்வேலி பாளையங்கோட்டைக்கு வந்து, இரா மாயணங் காந்த முதலிய புராணங்கள் வாசித்துப் பிரசங் கித்துக் காலக்ஷேபஞ் செய்துவந்தார். அப்பொழுது அவ ருக்கு இஷ்டமாயும், இரேனியுஸ் (Rev. C. T. E. Rhenius) ஐயருக்குத் தமிழ் முனிஷியாயுமிருந்த திருப்பாற்கடனாத கவிராயர் மூலமாய் ஒரு யூரோப்பிய போதகருக்குத் தமிழ் முனிஷியாக நியமிக்கப்பட்டார். அப்படியே இரண்டொரு போதகமார்களிடமிருந்து கடைசியாய் மெஞ்ஞானபுரம் தாமஸ் (Rev. J. Thomas) ஐயருக்கு முனிஷியானார். அந்தப் போதகர் அவர் மேல் பிரியமுள்ளவரா யிருந்

ததுமன்றி வாசல் வித்துவான் போல வைத்திருந்தார். அக்காலத்தி லின்னும் பக்தியிற் சிறந்த சாப்டர் (Rev. P. P. Schaffter) ஐயர் முதலிய போதகமார்களும் அவர்பேரில் மிகவும் பிரியமாயிருந்தார்கள். அவர்களுடைய பிரசங்கம், சம்பாஷணை, நடக்கைமுதலிய வேதுக்களால் கிறிஸ்து ரக்ஷகரது மாட்சிமையைப்பற்றி வெகுவாயறிந்திருந்த போதிலும் அந்த இரக்ஷகரையன்றி வேறே இரக்ஷிப்பின் வழியில்லையென்கிற தேவவிருணயத்தை யறியாமற்போன காரணந் தெரியவில்லை. "கைக்கெட்டியது வாய்க்கெட்டாதது போல" கிறிஸ்துமார்க்கமும் சத்தியந்தான், அறுசமயங்களுள் ஒன்ருயிருக்கவேண்டும் என்ற மேலெழுச்சியான எண்ணத்தினுலும், நான் பிடித்த பிடியை விடமாட்டேனென்கிற மன உறுதியினுலும் செந்திலான்பேரிலேயே சிந்தையாயிருந்தனர்.

"வாழச் செய்தாலு முனக்கே யடைக்கலம் வாழ்க்கையின்றித்
தாழச் செய்தாலு முனக்கே யடைக்கலம் தாழ்நரகில்
வீழச் செய்தாலு முனக்கே யடைக்கலம் வீண்டுயரில்
ஆழச் செய்தாலுஞ் செந்தூரா வுனக்கே யடைக்கலமே."

என்றிப்படி மனதை வற்புறுத்திக்கொண்டு இலவுகாத்த கிள்ளைபோல அக்குமரனை நம்பிக்கொண்டிருந்தனர்.

சோதிட சாஸ்திரமும் அவருக்குத் தெரியுமென்ருலும் அது அபத்தமென்று அறிந்திருந்தமையால் சாதகம், பக்ஷி முதலானதுகள் பார்க்கிறது பிரயோஜனமற்றவைகளாய் மாத்திரமல்ல, மனுஷரை யநேக நன்மைகளினின்று கெடுக்கிறவைகளாயிருக்கின்றனவென்று சொல்லித் தமது கிரியைகளிலும் அவைகளைப் பாராட்டுகிறதில்லை.

சண்முகநாத கவிராயர் குடும்பமும், அவரது வளர்ப்பும்.

வயிரவநாத கவிராயருக்குத் தாரம் இரண்டு. முதல் தாரத்தாள் பெயர் ஆவுடையம்மை. இவளுக்கு ஒரே புத்திரன். அவர் பெயர் சிவசுப்பிரமணிய கவிராயர். இரண்டாந்தார மனைவி பெயர் உலகம்மை. இவளுக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையுமிருந்தனர். அவர்களில் மூத்தவர் பெயர் **சண்முகநாத கவிராயர்.** இவர்தாம் தாமஸ் இயேசுதாச கவிராயர், இளையவர் பெயர் வள்ளிநாயகம் பிள்ளை. இவருக்கு பிளையவரான அந்தப் பெண்ணுக்குத் தேவ குஞ்சரமென்று பெயர்.

சண்முகநாத கவிராயர் 1830–வருஷத்தில் பிறந்தவர். அக்காலத்திலுள்ள அரி–நாரு வென்று கத்தும் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தாலும் அவர் தகப்பனார் தான் பாடஞ்சொல்லுவிப்பார். சுமார் பன்னிரண்டு வயதுக்கு மேல் நன்னூல் முதலிய இலக்கணங்களும், நாலடியார், நயினார் முதலிய நீதிநூல்களும், இராமாயணங் காந்த முதலிய புராணங்களும் தகப்பனாரே பயிற்றுவித்ததுமன்றிப் புராண காவியங்களில் சொல்லப்பட்ட பூமிசாஸ்திரம், வான சாஸ்திரத்திற்கும் கிறிஸ்தவர்கள் கண்ணாரக் கண்டெழுதிய சாஸ்திரங்களுக்கும் வெகு பேதங்களிருக்கின்றனவென்று விவரித்துக் காட்டுவார்.

அதெதப்படியென்றால் கந்தபுராணம் அண்டகோசப் படலத்தில், பூமி தட்டையாயிருக்கிறது, அதன் மத்தியில்

மகமேரு இருக்கின்றது, அந்த மேருவைச் சுற்றி சந்திர சூரிய நட்சத்திரங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அன்றியும் அம்மேருவை நாவலந்தீவு, இறலித்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, புட்கரத்தீவு, தெங்குத்தீவு, கமுகுத்தீவு என்று ஏழு தீவுகளும்; உவர்க்கடல், நன்னீர்க்கடல், பாற் கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன்கடல் என ஏழு கடலும், முறையே ஒன்றின்பின் னொன்றாகச் சூழ்ந்திருக்கின்றன. அப்புறம் சக்கரவாள கிரியும், அதைச்சுற்றி பெரும் புறக்கடலும், அதற்கப்புறம் இருள்பூமியும் கடைசியாய் அண்டச்சுவரும் சூழ்ந்திருக் கின்றன. இவ்வகையான தீவுகளும், கடல்களும், பருவதங் களுமுள்ள இப்பூமியைப் பூலோகமென்றும், இதுமுதல் புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகா லோகம், சத்தியலோகம் என மேலே ஏழுலோகமும்; அதலம் விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதலம் என கீழே ஏழுலோகமும்; ஆகப் பதினாலு லோகமடங்கிய ஒரு முட்டை வடிவமானது அண்டமென்றும், இப்படிப் பல்லாயிரக்கோடி அண்டங்களிருக்கின்றனவென்றும், வெகு விநோதமாய்ச் சொல்லியிருக்கிறது. கிறிஸ்தவர்களுடைய சாஸ்திரமோ, பூமி யுருண்டைவடிவமாய் அந்தரத்தில் தன்னிலுருண்டுகொண்டு சூரியனை வருஷத்திற்கொருதரம் சுற்றி யோடுகின்றது. மற்றக் கிரகங்களும் பூமியைப் போலவே சூரியனைச் சுற்றி யோடுகின்றன. தண்ணீரால் பொதியப்பட்டு, வெளியே தோன்றுகிற தரை பூமியென்று சொல்லப்படும் என்றிவ்வித விவரங்கள் தெளிவாய்ச் சொல்லுகிறது.

அல்லாமலும் சந்திர சூரியர்களை இராகு, கேது என்னுங் கரும்பாம்பு, செம்பாம்பு தீண்டுவது கிரகணமென்று புராணங்கள் சொல்லுகின்றன. கிறிஸ்தவர்கள் சாஸ்திரத்தில் சூரியனைச் சந்திரன் மறைக்கிறது சூரிய கிரகணமென்றும், சந்திரனைப் பூமியின் நிழல் மறைக்கிறது சந்திர கிரகணமென்றுஞ் சொல்லியிருக்கிறது. இதுவே கணிதசாஸ்திரத்திற்கு மொத்திருக்கின்றது.

கிறிஸ்து மார்க்கமும் அப்படியே விசேஷித்ததாயிருக்கின்றது. மனிதர் தங்கள் பாவங்களை நிவர்த்தி செய்து கொள்ள ஏதுவின்றி நரக தண்டனைக்கே உரியவர்களாகப் போய்விட்டதினால் அவர்களுக்கிரங்கித் திரித்துவத்தில் ஒன்றான தேவகுமாரன் தாமே கிறிஸ்துவாக உலகத்தில் வந்து மனிதாவதாரஞ்செய்து சகல சன்மார்க்கத்தையும் நடக்கையினாலும் பிரசங்கத்தினாலும் கற்பித்து, சிலுவையிலறையுண்டு, இரத்தஞ்சிந்தும் பலியாகத் தம்முடைய உயிரையுங்கொடுத்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றும் நாள் உயிரடைந் தெழுந்து, மோக்ஷலோகத்திற்போய், தமது பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருந்துகொண்டு, தேவனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தராய், தமது அடியார்களுக்காகப் பரிந்து பேசி, இரக்ஷிப்பைச் சம்பாதித்திருக்கிறாரென்றும், அவரை விசுவாசித்துவருகிற எந்தப் பாவிக்கும் ஆத்தும இரட்சிப்பை யருளிச்செய்கிறாரென்றும், அவர் சீக்கிரம் இவ்வுலகத்திற்கு வரப்போகிறாரென்றும், வரும்போது அவருடைய பக்தர்கள் மாத்திரம் உயிரடைந்தெழுந்து அவருடனேகூட இந்த உலகத்தைச்

சிலகாலம் அரசாளுவார்களென்றும், அப்புறம் அவர் நியாயாசனத்திலுட்காரும்போது சமஸ்த ஜனங்களும் உயிர்த்தெழுந்து அவர் முன்பாக நிற்பார்களென்றும், தம்மையசட்டை செய்து பாவத்தில் நிலைநின்று தமது அன்புக்கு அபாத்திரராய் இடது பக்கத்தில் நிற்கிறவர்கள் நித்திய நரகவேதனை யடையவும், வலது பக்கத்தில் நிற்கிற தமது அடியார்கள் நித்தியானந்த மோக்ஷத்தை யவருடனேகூடச் சுதந்தரித்துக்கொள்ளவும் தீர்ப்புச் செய்வாரென்றும் கிறிஸ்துவேதஞ் சொல்லுகிறது. அது நியாய தோரணையாயிருக்கிறதுமல்லாமல் அந்த மார்க்க பக்தர்கள் தங்கள் உயிரையும் பொருட்டாக எண்ணுமல் அந்த ரக்ஷகரிடத்தில் விசுவாசமா யிருக்கிறார்கள். அது உண்மை யில்லாவிட்டாலப்படிச் செய்வார்களா? அதுவும் உண்மையாகத்தான் இருக்கவேண்டுமென்று தமது மனதில் தோன்றிய உண்மையை மறைக்காதபடி சம்பாஷித்துக்கொண்டிருப்பார்.

இவ்வித பயிற்சியினாலே சண்முகநாத கவிராயர் தெளிந்த புத்தியும் முதிர்ந்த அறிவும் அமர்ந்த வார்த்தையும் துணிந்த சித்தமும் உடையவராய் வளர்ந்தனர். சன்மார்க்கமும் தகப்பனாருடைய நடக்கையினாலே பயிற்றுவிக்கப்பட்டது. சமையதீட்சை பெற்றிருந்தனர். இவரும் ஒவ்வொருநாளும் ஸ்நானம்பண்ணி அநுஷ்டானஞ்செய்து சந்தனப்பொட்டிட்டுச் சுப்பிரமணிய ஸ்தோத்திரஞ் செய்து பிற்பாடு போஜனத்திற்குப் போவார். குலதெய்வங் கொண்டாடுவதிலும் பக்தியுள்ளவராய் வெள்ளி, செவ்வாய்களில் சாம்பிராணித்தூபம் போட்டுக்கொண்டு வெகு புனிதமா

யிருப்பார். விளையாட்டிலும் மெத்தப்பிரியர். கண்ணினல் கண்டதைக் கையினுற் செய்துபோடுவார். இசைக் கியானத்தில் தொண்டையால் பாடவும் கின்னரம், சாரங்கி, பிற்றில், வீணை முதலான வாத்தியங்கள் கையினல் வாசிக்கவும் பழகியிருந்தனர். தகப்பனர் கையின் கீழ்ப் பிள்ளையாய் மானுட்டில் வாசம்பண்ணிக்கொண்டிருந்தனர்.

சண்முககாத கவிராயர் கலியாணமும் உத்தியோகமும்.

திருச்செந்தூர் திருவிழாவுக்கு வந்திருந்த தென்காசி சுப்பிரமணிய ஓதுவாமூர்த்தி, சண்முககாத கவிராயர் குணாதிசயங்களைக் கண்டு தம்முடைய குமாரத்தி உலகம்மாளை அவருக்கு விவாகஞ் செய்துகொடுக்க மனமாயிருப்பதாகத் தோற்றுவித்தார். இந்த ஓதுவாமூர்த்தி சைவாகமத்தின்படி தவருமல் நடக்கப் பிரயாசப்படுகிறவர். "தென்காசி ஆசாரம் திருநெல்வேலி யுபசாரம்" என்கிற பழமொழியில் தென்காசி ஆசாரமென்பது இவருடைய வீட்டிலிருந்துதா னுண்டானது. ஒரு நாளாவது சிவதரிசனம் பண்ணுகிரார். மற்றப் பந்துக்கள் வீட்டிற்குப் போனுலும் வெண்கல பாத்திரத்தில் ஆசாரத்தில் சமையல் செய்யச்சொல்லிச் சாப்பிடுவார். அவர் வீட்டிற்கு மற்றப் பந்துக்கள் வந்தாலும் ஸ்நானஞ்செய்து ஆசார வஸ்திரந் தரித்துக் கொண்டு போனுல்தான் அவர் கூடவிருந்து புசிக்கலாம்.

ஈரவெண்காயம் வெள்வெண்காயம் புசியார். அவரது பூசை நயிட்டிகமோ சொல்லிமுடியாது. சிவன்கோவில் தேவாரப் பணிவிடைதான் அவர் குடும்பத்தின் தொழில். விருந்து வீடுகளில் முதலிடம் அவருக்குத்தான். இவருடைய புத்திர புத்திரிகளில் கணபதிப்பிள்ளையென்னும் ஜேஷ்டபுத்திரனும் உலகம்மாள், திருமலையம்மாள் என்னும் புத்திரிகளிருவரும் இரக்ஷிப்பிற்குக் குறிக்கப்பட்டவர்களா யிருந்தார்கள்.

இந்த ஓதுவாமூர்த்தி குடும்பஞ் சுயபந்துவாயும், தமக்கு இசைந்த சம்பந்தமாயு மிருக்கிறதென்று வயிரவநாத கவிராயர், தென்காசிக்குப் போய்ப் பெண்பேசி வரும்படி தகுந்த ஓர் மனுஷனை யனுப்பினர். அப்படியே அந்த மனுஷன் தென்காசிக்குப் போய் மேற்சொன்ன ஓதுவா மூர்த்தி வீட்டாரோடு பெண் விஷயத்தைப் பேசவே, அவர்கள் பெண்மாப்பிள்ளையின் சாதகப் பொருத்தம் பார்க்க ஆரம்பித்தார்கள். ஒற்றைச் சாட்டில் நின்று பொருத்த மில்லாமற் போயிற்று. பெண் பேசப்போன மனுஷன் திரும்ப வந்து சாதகம் பொருந்தாததினல் ஒன்றும் பேசாமல் வந்துவிட்டேனென்று சொன்னர். சாதகம் பார்ப்பது அறிவீனமென்று மனதில் வைத்துக்கொண்டு வயிரவநாத கவிராயர் இந்தத் தென்காசிப் பெண்ணும் வேறிரண்டு பெண்ணுங் குறிப்பிட்டுத் திருவுளச்சீட்டுப் போட்டுப் பார்ப்போமென்று தீர்மானித்து, திருச்செந்தூர் சுப்பிரமணியர் சந்நிதியில் சீட்டுப் போட்டுப் பார்த்தார். தென்காசிப் பெண்தான் உத்தமமென்று கண்டது. தென்காசி ஓதுவாமூர்த்தி குடும்பத்திலும் சிலரைத் தமது பிள்ளை

களாகத் தெரிந்தெடுத்துக்கொள்ளச் சித்தங்கொண்டிருப்பது பிசாசுகளுங்கூட அச்சமயத்தில் அறியக்கூடாதிருந்தது.

திருவுளச்சீட்டுப் போட்டுப் பார்த்ததில் தேவ உத்தர வாயிருப்பதால் சாதகப்பொருத்தம் நிமித்தமில்லையென்று சுப்பிரமணிய ஓதுவாமூர்த்திக்கு வயிரவநாத கவிராயர் தெரிவித்தபோது, அந்த ஓதுவாமூர்த்தி சகல அவ பக்தியையுந் தள்ளிவிட்டு உங்களுக்குச் சம்மதமானால் எனக்குஞ் சம்மதந்தானென்று சொல்லியனுப்பினார். அப்படியே கலியாணம் நிச்சயித்து மானாட்டில் சண்முகநாத கவிராயருக்கும் உலகம்மாளுக்கும் பத்ததிப் பிரகாரம் குல குரு விருந்து ஏழுநாள் சடங்கையும் மூன்று நாளில் நடத்திக் கலியாண முடித்தனர்.

மெஞ்ஞானபுரத்தில் ஜேம்ஸ் ஸ்பிராட்டு ஐயர் (Rev. James Spratt) வயிரவநாத கவிராயரிடத்தில் தமிழ்ப் பாஷை கற்றுக்கொண்டிருந்த காலத்திலும், பின்பு தாமஸ் ஐயர் (Rev. J. Thomas) சீமைக்குப் போயிருக்கும்போது மெஞ்ஞானபுரத்தில் வசித்துக்கொண்டிருந்த காலத்திலும் அவருடன் அதிகமாய்ப் பழகியிருந்தமையால் தெய்வ பக்தி யவர்முகத்தில் ஒழுகுகின்றது என்று அவரது பக்தி விசுவா சத்தைப்பற்றி வயிரவநாத கவிராயர் வியந்து பேசுவது மன்றி, கிறிஸ்துவின் அன்பு அவரிடத்தில் பிரதிபிம்பித்துத் தோன்றினபடியால் அவரது மாயமற்ற அன்பையும் நம்பி யிருந்தனர்.

சண்முகநாத கவிராயருக்கு ஒரு தமிழ் முனிஷி உத்தியோகம் செய்வித்துக் கொடுக்கவேண்டுமென்ற நோக்கமாய் அவர் தகப்பனர் அவரைக் கூட்டிக்கொண்டுபோய் ஜேம்ஸ் ஸ்பிராட்டு ஐயர் (Rev. James Spratt) முன்விட்டு இவனைத் தங்களுடைய பிள்ளையாக அங்கீகரித்துக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தார். அதற்கு அவர் அவன் கிறிஸ்தவனுயிருப்பானுனல் என் பிள்ளை யென்பதற்குச் சந்தேகமில்லை. அந்தப் பேதமிருக்கிறதே யென்று சொல்லி மற்ற விஷயங்களிலெல்லாம் பிள்ளைபோலவே அன்பு பாராட்டி வந்தனர். இரண்டு மூன்று தடவை முனிஷியலுவல் செய்வித்துக்கொடுத்தும் அது நீடித்து நிற்க இடமில்லாமற் போயிற்று. பின்பு ஜேம்ஸ் ஸ்பிராட்டு ஐயர் (Rev. James Spratt) இனி இப்படிச் செய்கிறது எனக்குப் பிரியமில்லை. சற்றுப் பொறுத்திரு; பாளையங்கோட்டையில் வேதபாடம் பயிற்றுவிக்கிற கல்விச்சாலை (Preparanda Institution) ஒன்று ஏற்படப்போகிறது. அதில் உன்னை முனிஷியாக நியமிக்கும்படி சிபார்சு செய்கிறேனென்று சொல்லி, சார்ஜென்ற்று ஐயருக்கு (Rev. E. Sargent) ஒரு காகிதம் கொடுத்துப் பாளையங்கோட்டைக்குச் சண்முகநாத கவிராயரை யனுப்பினர். சார்ஜென்ற்று ஐயர் (Rev. E. Sargent) அக்கடிதத்தைப் பார்வையிட்டுக்கொண்டு இன்னும் அநேகர் இம்முயற்சிக்குச் சிபார்சு பெற்று வந்திருப்பதால் நான் எல்லாரையும் பரீக்ஷித்துத் தேறினவரை நியமிப்பேன் என்று சொல்லிப் பரீக்ஷித்ததில் சண்முகநாத கவிராயர் தேறினது கண்டு சந்தோஷித்து இரண்டொரு மாதத்திற்குள் கல்விச்சாலை ஏற்படுத்தப்படும், அப்போது வாலாமென்று சொல்லி யனுப்பிவிட்டார்.

சண்முகநாத கவிராயர் தந்தையின் மரணம்.

வயிரவநாத கவிராயர் தாமஸ் ஐயர் (Rev. J. Thomas) இடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அணியாபரண நல்லூருக்கு வந்திருந்த சமயத்தில் வயிற்றளைச்சலுபத்திரவ முண்டாகி வருத்தப்படுகிறாரென்று சமாசாரங் கேள்விப் பட்டு சண்முகநாத கவிராயர் அணியாபரண நல்லூருக்குப் போனார். மற்றச் சகோதரர்களும் அவ்விடத்திற்கு வந்திருந்தார்கள். வயிரவநாத கவிராயருக்கு வர வர வியாதி யதிகரித்து மரணகாலங் கிட்டி நெருங்கவே தமது நம்பிக்கை யெல்லாந் தலைகெட்ட நூலாய்ச் சிதறிப்போயிற்று. சமாதானத்திற்கு ஓர் வழியும் புலப்படாமல் மக்களைப் பார்த்து நான் பிடித்த கொப்பு முருங்கைக் கொப்பாய்ப் போயிற்று என்று சொல்லி, வியாகுலமடைந்துகொண் டிருந்ததோடு மரண தருணத்திலும் "நந்தவனம் அழிந்தது, கழுதை மேய்ந்தேன், குதிரை மேய்ந்தேன்" என்று சொல்லி வியாகுலித்து மூர்ச்சையடைந்தனர். இவ்வசனத் தைக் கேட்ட உறவினர்கள் பெரிய மனுஷாள் வாக்கில் கடைசிக் காலத்தில் இப்படிப் பிறக்க வேண்டியதென்ன, இந்தக் குடும்பத்திற்கு என்ன கேடு சம்பவிக்குமோவென்று கவலையாய்ப் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தார்கள். பின்பு அவருடைய குடும்பத்தாரெல்லாரும் கிறிஸ்தவர்களான போது அவ்வசனம் இவ்விதமாய் நிறைவேறிற்றென்றுஞ் சொல்லிக்கொண்டார்கள். வர வர அக்குடும்பத்தின் அபி விர்த்தியையும் சன்மார்க்கத்தையும் சம்பத்தையும் கண்டபின் பந்துக்களுக்குள்ளிருந்த அந்த எண்ணம் மாறிப்போயிற்று.

அந்த வசனம் தமது ஆத்தும நிலைமையைப்பற்றிச் சொன்னுரென்பது இப்போது பரிஷ்காரமாய் விளங்குகின்றது. அப்போது ஆத்துமத்தின் அருமையைப்பற்றி யங்கொருவருக்குந் தெரியாதாகையால் அதன் கருத்து விளங்காதே போயிற்று. நான் பிடித்த கொப்பு முருங்கைக் கொப்பாய்ப் போயிற்று என்ற முந்திய வார்த்தையினுல் இந்த வசனமும் ஆத்துமாவைப் பற்றித்தானென்பது நிச்சயமாகிறது.

ஐயோ, அந்த ஆத்துமாவுக்கு எவ்வளவு பரிதாபமிருந்ததோ! இப்படித்தான் அநேகர் தேவனுக்கு முன்பாகத் தங்கள் சிற்றறிவைப் பேரறிவாக வெண்ணித் தம்மனதிற் கிசைந்த ஒன்றை நம்பிக்கொண்டிருந்து சத்தியத்தை மறுத்துவிடுவதினுல், கடைசிக்காலத்தில், அது வீணென்று கண்டு துக்க சாகரத்தில் அமிழ்ந்து நரகத்துக்கு ஆளாகிருர்கள்.

அப்போது ஒரு மெய்க்கிறிஸ்தவன் அவர் பக்கத்திலிருந்து "இயேசுவின் ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி யவரே. அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமங் கட்டளையிடப்படவுமில்லை." என்கிற உண்மையை உணர்த்தியிருப்பானுனல் அந்த ஆத்துமா எவ்வளவு சமாதானத்தை யடைந்திருக்கக்கூடும்.

சண்முகநாத கவிராயர் உத்தியோகத் தமர்ந்தது.

சண்முகநாத கவிராயரும் மற்றச் சகோதரரும் தகப்பனார் கருமாதிகிரியை முடிந்தபின்பு, மெய்ஞ்ஞானபுரத்துக்குப் போய் வளர்த்த தகப்பன் போன்ற தாமஸ் ஐயரைப் பார்த்தபோது, அவர் மகா பரிதாபத்துடன் இவர்களிடந் துக்கம் விசாரித்து உங்கள் தகப்பனாரை விட்டுப் பிரிந்த துக்கம் ஒருக்காலும் ஆறக்கூடாததா யிருக்கிறது. அவர் கிறிஸ்தவனா யிருந்திருப்பாராகில் நான் மோக்ஷத்தில் மறுபடியுங் கண்டு சந்தோஷிக்கக்கூடும். அப்படிக்கில்லாமற் போனதினாலே இனி எப்போது காணப்போகிறேன் என்று துக்கித்துக்கொண்டு, அவருடைய பிள்ளைகளையுங் காப்பாற்ற வேண்டுமென்ற கருத்து எனக்கிருப்பதினால் சண்முகநாத கவிராயரை அவர் தகப்பனாருக்குப் பதிலாக நியமித்துக் கொள்ளுகிறேனென்று சொன்னார். சண்முகநாத கவிராயர் முந்தியே பாளையங்கோட்டையில் பிரிப்பெயரான்றோ இன்ஸ்திற்றியுஷனில் (Preparanda Institution) முனிஷியாக நியமித்துக்கொள்வதாய் வாக்குப் பெற்றிருந்ததினால் அங்கே போவோமா, இங்கே இருப்போமா வென்கிற ஆலோசனைக்கு முடிவில்லாமல் தத்தளித்துக் கொண்டிருந்து கடைசியாய்ப் பாளையங்கோட்டைக்கே போவேனென்று சொன்னார். உடனே தாமஸ் ஐயர் வெகு விசனத்தோடு உம்மைப்போல நன்றிகெட்ட பிள்ளை வேறொருவருமில்லை யென்று சொல்லி யனுப்பிவிட்டார். அவருடைய விசனமிருந்தாலு மிருக்கட்டுமென்று துணிவு கொண்டது தேவ நடத்துதலாயிருந்தது.

அப்படியே சண்முகநாத கவிராயர் விடைபெற்றுக் கொண்டு பாளையங்கோட்டைக்கு வந்து முன் குறிக்கப்பட்ட கல்விச்சாலை யலுவலிலமர்ந்து வண்ணார்ப்பேட்டையில் குடியிருப்பு வைத்திருந்தார்.

சண்முகநாத கவிராயர் மைத்துனர் கணபதிப் பிள்ளையின் வரவும் கலியாணமும்.

அக்காலத்தில் சண்முகநாத கவிராயருடைய மைத்துனர் கணபதிப் பிள்ளை 21 வயதுக்குமேல் இங்கிலிஷ் பாஷை கற்கஆரம்பித்து பாளையங்கோட்டையில் குருக்ஷாங்ஸ் ஸ்கூலில் (Cruickshank's School) சேர்ந்து படிக்கும் பொருட்டுத் தமது மைத்துனரோடுகூட வாசஞ்செய்து கொண்டிருந்தார். இங்கிலிஷ் பயிற்சியோடு தமிழ் இலக்கணப் பயிற்சியுஞ் செய்து வெகுவா யறிவில் தேறிக்கொண்டு வருவதைக் கண்டு, சண்முகநாத கவிராயர் தமது சகோதரியை யவருக்கு விவாகஞ் செய்துகொடுக்க விருப்பமுற்றுத் தம் தாயாரோடு பேசினபோது, அவர் ஒருக்காலும் சம்மதிக்க மாட்டேன் "கொண்டுமாற்றுக் குழிமாற்று" என்று உலகஞ் சொல்வ தறிந்திலையோ வென்று விரசிவிட்டார். ஆனாலும் தேவன் இக்குடும்ப முழுவதையும் எடுத்தாண்டுகொள்ளச் சித்தமாயிருந்தபடியால், கொஞ்சக் காலத்திற்குள் சகல தடைகளும் நீங்கிவிட்டன. அஞ்ஞானமும் அவபக்தியும் நிறைந்த கணபதிப் பிள்ளையுடைய மாதாபிதாக்களும் யாதொன்றும் நோக்காமல், சாதகப் பொருத்தங்களும் பார்க்காமல், உலக அபவாதத்திற்கும் பயப்படாமல், எவ்வித

மாகவோ இந்தச் சம்பந்தத்திற்குச் சம்மதித்துக்கொண்டார்கள். அப்படியே கணபதிப் பிள்ளைக்கும், தேவகுஞ்சரத்திற்கும் ஆகமவிதிப்படி அணியாபரணநல்லூரில் கலியாணம் நடந்தேறிற்று.

சோதிடப் பயித்தியம்.

கணபதிப் பிள்ளையுடைய மற்றொரு சகோதரியை அவருடைய தகப்பனார் தமது தங்கை குமாரனுக்குப் பாணிக்கிரகணஞ் செய்து கொடுக்கும்படி யாலோசித்து, அந்த மாப்பிள்ளை வியாதியஸ்தனாக மிகவும் பலவீனமடைந்திருந்ததினால், திருநெல்வேலியில் மிகவும் பிரபலமாயிருந்த ஓர் சோதிட சாஸ்திரியிடத்தில் அந்த மாப்பிள்ளைச் சாதகத்தைப் பார்க்கும்படி கேட்டுக்கொண்டார். அச் சாஸ்திரியார் கிரக நிலைகளை நன்றாய் ஆராய்ந்து இந்தச் சாதகனுக்கு வயசு எண்பது என்று வெகு உறுதியாய்ச் சொன்னதினால் அச்சோதிடத்தை நம்பிக் கலியாணத்தை நிச்சயித்தார்.

இந்த விபரம் சண்முகநாத கவிராயருக்குத் தெரிந்து இதென்ன யோசனை மாப்பிள்ளையின் ஸ்திதி பயங்கரமாயிருக்கையில் மனதார ஒரு பெண்ணைக் கொண்டுவந்து கெடுக்கலாமாவென்று மாமனாரிடத்தில் கேட்டார். அதற்கவர் மாப்பிள்ளைச் சாதகம் ஆயுள் பலமுள்ளதாயிருக்கிறது. வேண்டுமானால் இன்ன சாஸ்திரியாரிடத்தில் கேட்டுக் கொள்ளுமென்றார். உடனே சண்முகநாத கவிராயர் அந்தச்

சோதிட சாஸ்திரியினிடத்திற் போய்க் கேட்டபோது, அவர் முன்சொன்ன பிரகாரமே அந்த மாப்பிள்ளைக்கு வயது எண்பது என்று வெகு உறுதியாய்ச் சொன்னர். மாப்பிள்ளையினுடைய தற்கால நிலைமையை அறிவீரா வென்று சாஸ்திரியாரிடத்திற் கேட்க, அவர் தற்கால நிலைமை எப்படியிருந்தாலென்ன, அந்த மாப்பிள்ளைக்கு எண்பது வயதுக் கிடையில் ஆயுள் துர்ப்பலம் நேரிடுமானல் என் சோதிட சாஸ்திரங்களை யெல்லாம் கிழித்து வாய்க்காலில் எறிந்துவிடுவேனென்று சபதங் கூறினர். சண்முகநாத கவிராயர் அது கேட்டு விசனமடைந்து, இந்த அறியாமையின் பலன் அடைந்த பிற்பாடுதான் தெரியும் என்று சொல்லி விட்டு வந்து மாமனரிடம் சோதிடத்தை நம்புவது சுகிர்த மல்ல. செய்கிறதைத் தீர்க்க ஆலோசித்துச் செய்யுங்கள் என்று சொன்னர். இதையெல்லாங் கவனியாமல் சுப்பிரமணிய ஓதுவாமூர்த்தி சாதகப் பிசாசை நம்பிக் கலியாணம் நடப்பித்தனர். கலியாண முடிந்த நாலாம்மாதம் மாப்பிள்ளை இறந்தனர். அந்தத் துக்கம் ஆற்ருது அப் பெண்ணும் கொஞ்சக் காலத்திற்குள் மடிந்தனள்.

ஐயோ இதென்ன பேதமை! இப்படி யெத்தனையோ திருஷ்டாந்தங்க ளிருந்தாலும் எத்தனையோ கேடுகளடைந் தாலும் இன்னுமுலகில் சோதிட மாயை நீங்காது நிலை நிற்பது பிசாசினுடைய ஒருபாயமென்பதற்கு என்ன ஐயம்.

சண்முகநாத கவிராயர் மார்க்க ஆராய்ச்சி.

சண்முகநாத கவிராயர், கிறிஸ்துவின் ஞான சூரியப் பிரபை வீசவே, இந்துமத புராண காவியங்களில் முதலில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையும், பக்தி வைராக்கியமு மாகிய மாயை விலகியோடினதால் அப்புராண காவியங்க ளெல்லாம் கட்டுக் கதைகளென்றும், அவைகளின் கோட் பாடுகள் அபத்தமென்றும் நாளடைவில் அறிந்துகொண்டார். ஆயினும் உண்மையான ஒன்று இன்னம் புலப்படாமையால் "ஊரோடு ஒக்கோடு" என்று சொல்வது போலச் சிலகாலம் பேருக்கு அவர் தமது மார்க்கத்தையே அனுசரித்துவந்தார்.

தாம் அலுவல் பார்த்துவந்த கல்விச்சாலையில் உபாத்தி மார்களாய்ப் போதகப்பட்டம் பெறுவதற்கிருந்த சத்தியநாத பிள்ளை, பெரியநாகம் பிள்ளை, வேதநாயகம் பிள்ளை, லூக்கா உபாத்தியாயர் முதலாகியவர்களோடு மிகவும் இஷ்டமா யிருந்தார்.

மேலே சொன்ன உபாத்திமார்களில் சத்தியநாத பிள்ளையென்பவர் திருநெல்வேலி ஜில்லாவில் உண்மையாய்க் கிறிஸ்து மார்க்க சத்தியத்தை யுணர்ந்து மனந்திரும்பிக் குணப்பட்டவர்களில் கிறிஸ்து இரக்ஷகருக்கு முதற் பலனானவர். "விளையும் பயிர் முளையிலே தெரியு" மென்பது போல அவருடைய பக்தி விசுவாசம் அப்பொழுதே பிரகாசித்து வளர்ந்துகொண்டிருந்தன. பின்பு அவர் குருப் பட்டம் பெற்று சீமை வரையும் பெயர்போன போதகராய்ச் சென்ன பட்டணத்தில் வசித்துக்கொண்டிருந்தனர். அவர்

சண்முகநாத கவிராயருக்கு விசேஷித்த அகநட்புடையவரா யிருந்தார். கிறிஸ்து மார்க்க சம்பாஷணையும் அடிக்கடி நடந்து கொண்டிருந்ததுமன்றிக் கிறிஸ்தவர்களுக்குரிய அன்பு, தாழ்மை, பொறுமை, சாந்தம், சுத்தம், பக்தி, விசுவாசம், நடை, யுடை, பாவனை முதலியவைகளைப் பார்த்தும் கேட்டுமிருந்ததினால் பல சமயங்களிலும் ஊன்றப் பட்டிருந்த ஜீவவிதை சண்முகநாத கவிராயர் இருதயத்தில் வேர் தரிக்கத் துவக்கிற்று.

இயல்பாகவே காரியங்களைத் திட்பநுட்பமாக யூகித் தறிகிற புத்தியும், இதுசரி, சரியன்றென்று பகுத்தறிகிற விவேகமும், ஷண்முகநாத கவிராயருக்கிருந்தன. அக் காலத்தில் உதயதாரகை யென்னுமோர் தமிழ்ப் பத்திரிகை வேதசாஸ்திரம், பூமிசாஸ்திரம், தேசசரித்திரம் முதலிய பல சங்கதிகளைப்பற்றியும் தெளிவாய் எடுத்துக் காட்டுகிற சிறந்த பத்திரிகையா யிருந்ததினால் அதை வாசித்தறிந்த அறிவோடு தமது சொந்த மார்க்கத்தில் தாம் அடைந்திருந்த அறிவையும் ஒப்பிட்டுப் பார்க்க மிகவும் உதவியாயிருந்தது. உலக சிருஷ்டிகளையும் பூர்வ சரித்திரங்களையும் தேவத் தன்மையையும்பற்றிக் கிறிஸ்து மார்க்கத்தில் சொல்லப் பட்டிருக்கிறவைகள் புத்திக்கும் அநுபவத்திற்கும் ஒத்திருக் கின்றனவென்றும் புராண காவியங்களிற் சொல்லியவைகள் நம்பத் தக்கவை யல்லவென்றும் அவர் மனதிற்பட்டது. இந்துமத சடங்காசாரங்களுக்கும் யாகாதி கிர்த்திய முதலிய பலிகளுக்கும் சரியான முகாந்தர மில்லாமையால் பழைய ஏற்பாட்டில் சொல்லப்படும் ஆகம விதிகளே யவர்களுக்கு

மூலாதாரமாயிருக்க வேண்டுமென்றும், இந்துமத தேவாலயங்களைப் பார்க்கும்போது மூலஸ்தானம், பரிசுத்தஸ்தலம், பொதுஸ்தலம், சுற்றுப்பிரகாரம், பலிபீடம், முன்மண்டபம் முதலிய கட்டடம் யாவும் எருசலேம் தேவாலயத்தின் சாயலாகவே இருக்கின்றமையால் அதைப் பார்த்தவர்களாலே தான் இந்தப் பிளான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும், இந்து மார்க்கத்தில் சொல்லப்படும் பல அவதாரங்களுக்கும் சற்குரு தோற்ற முதலானதுகளுக்கும் தேவன் மனுஷாவதாரமாய் உலகத்தை இரக்ஷிக்க வருவாரென்று கிறிஸ்து மார்க்கத்திற் சொல்லியிருக்கிற சத்தியமே காரணமாயிருக்க வேண்டுமென்றும் திட்டமாய் நம்பினர்.

பாளையங்கோட்டையில் இலக்கண இலக்கியத்திற்றேறி மகா வித்வான்களாக எழும்பியிருந்த முத்தையா பிள்ளை, கிருஷ்ண பிள்ளை யென்பவர்களும் சண்முகநாத கவிராயருக்குச் சிநேகிதர்களாயிருந்தார்கள்.

"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையர் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்
தும்பர் உறைவார் பதி"

என்று நாலடியார் சொல்லியபடி அவர்களுடைய சிநேகம் வியந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. இவர்களோடு கல்வி கற்றுக்கொள்ளும்படி இன்னுஞ் சிலர் கூடி வருவார்கள். இவ்வகையாக ஓர் சங்கத்தார் போலக் கூடி சிலர் இங்கிலிஷிலும், சிலர் தமிழிலும், சிலர் இங்கிலிஷ், தமிழ் இரண்டிலும் வெகு ஜாக்கிரதையாய்ப் பயிற்சிசெய்து வந்தார்கள். அப்படி ஒவ்வொருவரும் அறிவில் தேறி வருங்காலத்தில்

சண்முகநாத கவிராயர் ஆத்துமக் கவலையுள்ளவராகித் தமது சிநேகிதரோடு மார்க்க சம்பாஷணை செய்யத் தலைப்பட்டுக் கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றித் தமது மனதிற்பட்ட நியாயங் களைச் சொல்லித் தர்க்கித்தும் அவர்கள் சொல்லுகிற நியாயங் களுக்கு எதிர் நியாயம் சொல்லி ரூபித்தும் வந்தார்.

புராண காவியங்கள் நம்பக்கூடியன வல்லவென்றாலும் வேதாந்தத்திலாவது ஒருவேளை யுண்மை யிருக்கலாகாதா வென்று முத்தைய பிள்ளையும், சண்முகநாத கவிராயருங் கூடி வேதாந்த சாஸ்திரங்களை வெகு நுட்பமாய் ஆராய்ந்து பார்த்தார்கள். அது சாதுரியமாய்ப் பேசத்தக்க சாஸ்திரமே யல்லாது அவ்வழி நின்று முக்தியடைதல் கூடியதல்ல வென்று நிச்சயிக்கப்பட்டது. தத்துவ சாஸ்திரத்திற் கூறும் பேதாபேதங்களை யுணர்ந்து, ஐம்புலனவித்து, தானென்னும் விகற்பத்தையும், அடுத்துவரும் ஊழையும், தாயத்தாரையும், இருவினையையும், மும்மலங்களையும், இகபர இச்சைகளையும், பஞ்சாவத்தைகளையும் ஒழித்து, ஒன்றையும் நோக்காமல் யதார்த்த சுத்தமாய்த் தானாக விளங்குவதே ஞானமென்று சொல்லப்படுகிறது. இங்ஙனம் இல்லாதனவும் இயலாதன வும் ஞான நிலையென்று கூறுகின்றமையால் அந்நிலை நிற்பது எத்திறத்தவர்க்கும் அரிதென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படிக்கொத்த ஞானிகள் இல்லவே இல்லை யென்பதற்குத் திருஷ்டாந்தமாக "திரிதருமுலகத்து அரிதொரு ஞானி" யென்று ஒரு பழமொழியும் உலகில் வழங்குகின்றது. இங்ஙனம் எவருக்கும் மோக்ஷமடைதல் அரிதாகும்வண்ணம் இரக்கம் நிறைந்த தேவன் ஓர் வழி ஏற்படுத்தியிருக்கிறா ரென்று சொல்வது அவரது லக்ஷணத்திற்கு ஒவ்வுமா?

ஒவ்வாதே. ஆத்தும ரக்ஷிப்பைத் தேடி பாவத்தைக்குறித்து மெய் மனஸ்தாபமடைந்து உண்மையாய் மனந்திரும்பிக் கடவுளை வழிபடுகிற எந்தப் பாவிக்கும் சத்திய வழியை யுணர்த்தி யதன்வழி நடத்தி ரக்ஷிப்பதல்லோ ஈஸ்வர கடாக்ஷத்தின் லக்ஷணம். ஆகையா லவ்வழி யவருடைய லக்ஷணத்திற்கும் பொருந்தாது.

அன்றியும் ஒருவன் ஞானபாத சாதனையில் நிற்கிறே னென்று எண்ணிக்கொள்ளுகையில், தான் பாவி யென்பதை முழுது மறந்து தான் கடவுளே யன்றிப் பிறிதொன்றல்ல வென்று எண்ணும் ஆணவசிந்தை மேற்கொண்டு அற்பச் சிருஷ்டியாகிய தன்னை நிர்மல சிருஷ்டிகாரகனாகவே எண்ணிக் கொள்வது தேவ நிந்தையாய் நரகிற்கு ஆளாக்குமேயல் லாமல் மோக்ஷமடைவித்தல் எவ்விதங் கூடும்? இவ்வித அநேக நியாயங்களால் அத்துவிதமும் தேவனருளிய மார்க்க மல்ல வென்பது பரிஷ்காரமாய் விளங்குகின்றது.

நாம் பாவிகளென்பதற்குச் சந்தேகமில்லை, நாமோவ் வொருவரும் அவரவர்களா லியன்றமட்டுக்கும் தானதருமம் ஜெபதப முதலிய நற்கிரியைகள் செய்யவேண்டுவதே நம்மைச் சிருஷ்டித்த தேவ நோக்கமாகையில் அது நமது கடமையாகிறது. நாம் செய்யவேண்டும் அக்கடமையைச் செய்யாவிடில் அது பாவமாகும். அப்படிச் செய்யக்கூடாமல் தவறிப்போவதால் பாவஞ் சுமந்துகொண்டு வருகிறதே யல்லாமல், ஒரு சமயத்தில் அக்கடமையைச் செய்து நிறை வேற்றுகிறதினால் அச்சமயத்தில் நிறைவேற்றவேண்டிய கடமை நிறைவேறுமே யொழிய அது முன் அக்கடமையை நிறைவேற்றத் தவறின பாவத்தை நீக்கத்தக்க புண்ணியமாக

மாட்டாதே. ஆகையால் ஒருவன் எவ்வளவு நற்கிரியைகள் செய்தாலும் செய்ய வேண்டிய கடமையேயல்லாமல் மனிதருக்கு நற்கிரியைகளாலுண்டாகும் சுய புண்ணியமில்லை யென்பது தெளிவாயிருக்கின்றது. ஆகையால் மனிதர்கள் சுய புண்ணியமில்லாமையால் பாவ நிவர்த்தியடைய யாதொரு வழியுமின்றி தேவ நீதியின்படி நரக தண்டனை யடைய வேண்டுமேயல்லாமல் வேறு கதியற்ற பாவிகளானார்கள்.

தேவன் நீதியிரக்க சமரசராகையால் தேவ நீதியின்படி பாவிகளைத் தண்டிக்கவேண்டியது எப்படி நியாயமோ அப் படியே யிரக்கத்தின்படி பாவிகளை ரக்ஷிக்கவேண்டுவதும் நியாயமா யிருக்கிறது. சுயகிரியைகள் புண்ணியமாகா மையால் திக்கற்றுப்போன பாவிகள் இரக்ஷிக்கப்படுவதற்கு நீதி வழுவாமலும் இரக்கத்திற் குறைவுபடாமலும் தேவன் தாமேயோர் வழியேற்படுத்த வேண்டுமேயொழிய வேறு வழியில்லை யென்பது நிச்சமாயிற்று.

ஆகையால் தேவன் தமது திரித்துவத்தில் ஒன்றான அநாதி குமாரனை அதற்கென்று ஏற்படுத்தி அனுப்பச் சித்தமானார். அக்குமாரன் உலகத்தில் பாவமில்லாத மனிதனாக அவதரித்து சர்வ லோகத்தின் பாவங்களையுஞ் சுமந்து அதற்குரிய தண்டனையைப் பட்டுத்தரித்துப் பாவ நிவாரண பலியாகப் பரிசுத்த இரத்தஞ்சிந்தி பிராணத்தியாகஞ் செய்து பாவிகளை மீட்டுக்கொண்டாரென்றும், வெற்றிவேந்தரா யுயிர்த்தெழுந்து, பரத்திற்கேறித் தமது பிதாவின் வலது பாரிசத்தி லுட்கார்ந்து, தமது அடியார்களுக்காகப் பரிந்து பேசி மன்றாடி இரக்ஷிப்பைச் சம்பாதித்திருக்கிறாரென்றும்,

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவ னெவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை யடையும்படிக்கு அவரையே தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தாரென்றும், பாவிகளை இரக்ஷிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தாரென்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்குப் பாத்திரமுமானது என்றும் சொல்லிய கிறிஸ்து சமயமொன்றே தேவனால் எற்படுத்தியதும் பாவ விமோசன மாக்கத்தக்கதுமான மார்க்க மாயிருக்கின்றது. அதுவே சத்தியம். அதையே யனுசரிக்க வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார்.

உயிர்த்தோழர் போன்ற முத்தையா பிள்ளை, கிருஷ்ண பிள்ளை யென்பவர்களும் இப்படியே நிர்ணயித்திருந்தவர் களானாலும் இயேசு ரக்ஷகரைப் பற்றிக்கொண்டு அவரது கொடியின் கீழமைவதற்குச் சற்றுத் தாமதிக்கிறவர்களாகக் காணப்பட்டார்கள். அவருடைய சகோதாரும் மைத்துனரும் அறிந்த சத்தியத்தைப் பற்றிக்கொள்ளச் சில சந்தேகங்கள் வைத்துக் கொண்டு ஆசையற்றவர்களா யிருந்தார்கள். யாரெப்படிப் போனாலும் நான் இனி கிறிஸ்து ரக்ஷகரைப் பற்றிக்கொள்ளப் பின் தாழ்ந்து தாமதிக்கமாட்டேனென்று தமது நோக்கத்தை வெளியிட்டிருந்தார்.

சண்முகநாத கவிராயர் தமது பத்தினியின் சம்மதம் பெறுதல்

சண்முகநாத கவிராயர் தம்முடைய பத்தினி கிறிஸ்து மார்க்கத்தின் உண்மையை முழுது மறியாதவளாகையால் அவளுக்குத் தமது மன நிலைமையைத் தெரிவிக்கையில் அறியாமையால் என்னென்ன குரோதங்கள் விளைப்பாளோ வென்கிற சஞ்சலமிருந்தாலும் எப்படியாவது அவளுக்குத் தமது தீர்மானத்தை வெளியிட்டுச் சமாதானப்படுத்தி இணங்கச் செய்ய வேணுமென்று தீர்மானித்து ஓர்நாள் இரவில் துன்ப சாகரத்தில் ஆழ்ந்தவராய் கிறிஸ்துமார்க் கத்துக்கே போக வேண்டுமென்ற தமது மன நிருணயத்தை மனைவிக்கு வெளியிட்டார். இந்த வசனங் கேட்ட மாத்திரமே அந்த அம்மாள் பொறி கலங்கி கொஞ்ச நேரம் பேச்சற் றிருந்து மன வருத்தத்தோடுங் கோபத்தோடும் நீங்கள் போக வேண்டுமானால் உடனே போங்கள் நான் ஒருக்காலும் வரமாட்டேன். அந்த மார்க்கத்தில் பல ஜாதியார் சேர்ந்து அது உலகத்தாரால் தூஷிக்கப்படுகிறதே அதை நான் அனுசரிப்பேனா என்றாள். உடனே சண்முகநாத கவிராயர் என் பிரிய மனைவியே, கிறிஸ்து மார்க்கத்தையும் அதிலுள்ள பக்தர்களையும் நீயறியாததினால் இப்படிப் பேசுகிறாய். என் சிநேகிதர்களாகிய உபாத்திமார்களையும் அவர்களுடைய சமுசாரங்களையும் நீ பார்ப்பாயாகில் யார் இழிவானவர் களென்று அறிந்துகொள்வாய். நாம் கிறிஸ்தவர்களாகிற பக்ஷத்தில் கிறிஸ்தவ உறவினர்களையும் சிநேகிதர்களையும்

போல நேசிக்கிறவர்கள் நம்முடைய ஜனங்களுக்குள் கண்டு பிடிப்பது அரிது. அன்பும் பிரீதியுமுள்ள அந்தச் சிநேகத்தைப் பார்க்கப் பார்க்க நீயே வியந்துகொள்வாயென்று ஆவலோடு பேசினர்.

அதற்கு மனைவி சற்றுப் பிரமித்துப் பின்பு நாம் கிறிஸ்தவர்களாவோமானல் ஜாதி வித்தியாசமில்லாமல் எல்லா ஜாதியார் வீட்டிலும் சாப்பிட்டு மாம்சந் தின்று அசைவமாய்ப் போகவேண்டுமல்லவோ என்ருள்.

கணவர், ஜாதி மேன்மையைப்பற்றி யோசிக்கிருயோ. அதொன்றுமில்லை, இடையில் உண்டானது. தேவசித்தத்திற்கும் விரோதமானது. முழுதுந் தப்பிதமான கொள்கை என்ருலும், மாம்சஞ் சாப்பிடவேண்டுமென்று ஒருவருங் கட்டாயம்பண்ண மாட்டார்கள். நீ மாம்சஞ் சாப்பிடாமலிருக்க வேண்டுமானலும் அப்படி யிருக்கலாம். நானே முழுவதும் ஜாதியை விட்டுவிடத் தீர்மானித்து என் மனதை உறுதிப்படுத்தியாயிற்று என்று சொல்லிப் பின்பு சிருஷ்டி ஆரம்பத்தையும் மனிதரைச் சுயாதீனசித்தமும் பரிசுத்தமும் உள்ளவர்களாகப் படைத்திருந்ததையும், சுயாதீன சித்தத்தினல் கற்பனை மீறிப் பாவத்தில் விழுந்ததையும், உலகம் பாவத்தால் நிரம்பியிருந்ததினல் ஜலப்பிரளயத்தினல் அழிக்கப்பட்டதையும், விசுவாசியாயிருந்த நோவாவின் குடும்பம் மாத்திரம் ரக்ஷிக்கப்பட்டு, அந்தக் குடும்பம் பலுகிப் பெருகி மறுபடியும் உலகத்தில் ஜனங்கள் பரவினதையும், ஆபிரகாம் ஈசாக்கு முதலான விசுவாசிகளுடைய சரித்திரத்தையும், இரக்ஷகர் ஒருவர் வருவார் என்கிற வாக்குத்தத்தத்தையும்,

இயேசு கிறிஸ்துவில்லாமல் பாவ நிவர்த்தி யில்லையென் பதையும், அவர் வந்த வரலாற்றையும், அவர் செய்த பாவப் பரிகாரத்தையும் பற்றிச் சுருக்கமாய்ப் பேசினார்.

அத்துணைவி பொறுமையாய்க் கேட்டுக்கொண்டிருந்து நாமெப்படி நம்முடைய தாய் பிள்ளைகளை விட்டுக் கிறிஸ்தவர் களாவோமென்றாள்.

நீ கிறிஸ்தவளாகாவிட்டால் மகா மனவருத்தத்தோடு உன்னை நான் பிரிந்து போகவேண்டி நேரிடுமென்று நாயகன் சொல்ல, உடனே அந்த அம்மாள் அழ ஆரம்பித்தாள்.

அப்போது பர்த்தா இனி நான் தாமதித்தால் கெடுதி நேரிடும். உடனே போகப் போகிறேன்; நீ வராவிட்டால் அமங்கலிபோல இருந்து காலந்தள்ள வேண்டிவரும் என்று பலவகையாய் ஆவலோடும் ஆகுலத்தோடும் பேசியபோது, அந்த உத்தமி மகா மனவருத்தத்தோடு நானும் வருகிறேன் என்று சம்மதித்தாள்.

இவ்வகையான சம்பாஷணையால் அந்த அம்மாளுடைய மன இருள் நீங்கிச் சமாதான வெளிச்சந் தோன்றவே, இரவும் விடிந்து சூரியனும் உதித்தது. இவ்வகையாய்ச் சண்முகநாதகவிராயர் தம்முடைய மனைவியுடைய சம்மதமும் பெற்றுக்கொண்டார்.

கணபதிப் பிள்ளை தம்முடைய சகோதரி கிறிஸ்து மார்க்கத்தில் தன் பர்த்தாவோடு கூடப் பிரவேசிக்கச் சம்மதித்திருப்பதை யறியாது, அவளைப்பார்த்து மாப்பிள்ளை

கிறிஸ்து மார்க்கத்துக்குப் போகப் போகிறேனென்று சொல்லிக்கொண்டிருக்கிறாரே, நீ கூடப் போகச் சம்மதிக்காதே யென்று சொல்லத் தங்கை, என்னிடத்திற் சொல்லிப் பிரயோஜனமென்ன? என்னெஜமானைப் போகவேண்டாமென்று சொல்லுங்கள் என்று அந்த அம்மாள் சொல்லிவிட்டாள்.

சண்முகநாத கவிராயர் கிறிஸ்துவின் கொடியின் கீழமைந்து தாமஸ் இயேசுதாச கவிராயரென்று நாமம் தரிக்கப்பெற்றது.

சண்முகநாத கவிராயர் அலுவல் பார்த்துவந்த கல்விச் சாலைக்குத் தலைமையாயிருந்த தாமஸ் ஸ்பிராட்டு துரைக்கும் (Thomas Spratt Esq.) மற்றும் உபாத்திமாருக்கும் தமது மனோரதத்தைத் தெரிவித்தார். அவர்கள் மிகவுஞ் சந்தோஷித்துக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி அவர் கிறிஸ்தவனாகிவிட்டால் பந்து ஜனங்கள் வந்து மிகவுந் தொந்தரவு செய்யாதபடி உடனே மெய்ஞ்ஞானபுரத்துக்குப் போய்விடுவது நலமென்று யோசித்து அதற்கு வேண்டிய யத்தனமெல்லாஞ் செய்துவைத்திருந்தனர்.

சண்முகநாத கவிராயர் தம்முடைய சகோதரர் வள்ளிநாயகம் பிள்ளை அச்சமயத்தில் வட திருநெல்வேலி நாட்டில் கூடாரவாசிகளாய்க் கிறிஸ்து ரக்ஷகரைப் பிரசங்கித்துக் கொண்டிருந்த ராக்கிலாந்து ஐயர், மேடோஸ் ஐயர் (Rev. Ragland & Rev. Meadows) என்னும் மகாத்துமாக்களிடம்

தமிழ் முனிஷியாகப் போயிருந்தமையால் அவரை வருத்தித் தமது தீர்மானங்களெல்லாஞ் சொல்லி, யவரையுங் கூடவே யிட்டுக்கொண்டு போகவேண்டுமென்று யோசித்து, உத்தரவு பெற்றுக்கொண்டு வரும்படி யவருக்குக் காகிதமெழுதியிருந் தார். அவர் வருமுன்னடி இந்தச் சமாசாரம் பந்து ஜனங் களுக்கு எட்டி ஒவ்வொருவராகப் புறப்பட்டுவந்து கிறிஸ்து மார்க்கத்துக்குப் போகவொட்டாதபடி தடைசெய்ய ஆரம் பித்தார்கள். விசேஷமாய் அவர் மனைவியுடைய தாயாரைப் பெற்ற பாட்டியார் இதற்கென்றே முன்னமே கூட்டிவந்திருந் தார்கள். இனித் தாமதித்தால் பல சங்கடங்கள் நேரிடு மென்று கருதி, 1855-ௗ ஜனுவரி ௴ 22-ௗ இரவு ஊருண் டடைத்துத் தூங்கினபின்பு வீட்டில் ஒருவருக்குந் தெரியாத படி தாமும் தம் மனைவியும் சற்றுச் சுகவீனமாயிருந்த கைக் குழந்தையையும் எடுத்துக்கொண்டு தயாராயிருந்த வண்டியி லும் பல்லக்கிலுமாக ஏறிக்கொண்டுமெய்ஞ்ஞானபுரத்துக்குப் புறப்பட்டுப் போய்விட்டனர்.

மறுநாள் காலமே நாலைந்து மணிநேரம்போல அவர் வீட்டிலுள்ள கணபதிப் பிள்ளை முதலானவர்களுக்குத் தெரிந்தது. உடனே யழுது விழுந்து கூக்குரலிட்டுக் கொண்டு பந்துக்களெல்லாருக்குங் காகித மெழுதி இது விவரத்தைத் தெரிவித்ததின் பேரில் அவர்களில் அநேகர் வந்து கணபதிப்பிள்ளையையும் இட்டுக்கொண்டு மெய்ஞ்ஞான புரத்துக்குப் போய்ச் சண்முகநாத கவிராயரையும் அவரு டைய மனைவியையும் நாங்கள் கண்டு பேசிக்கொள்ள வேண்டு மென்று வெகு அங்கலாய்ப்போடு கேட்டுக்கொண்ட

போதிலும் இப்போது உங்களைப் பார்க்க மனதில்லையென்று சொல்லி யனுப்பிவிட்டனர். அப்படியே மனஸ்தாபத்துடன் அவரவர் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போய்விட்டார்கள்.

சண்முகநாத கவிராயரது உண்மையையும், ஆத்துமக் கவலையையும், நன்மையென்று கண்டதைப் பிடித்துக்கொள் ளும் திடச்சித்தத்தையும், பல சமயங்களையும் பரீக்ஷித்துக் கிறிஸ்து சமயமே சத்தியமென்றறிந்த அறிவையும், பாவ பயத்தையும், தேவ பக்தியையும், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தையும், நல்லொழுக்கத்தையும் அப்போது உலகத் தார் அறியாததினாலே பலவாறாக அவரைப்பற்றிப் பிதற்றி னார்கள்.

இவருக்கு ஏன் இப்படிப் புத்தி கெட்டுப் போயிற்று; குலக்கொழுந்தாயிருந்தவர் நற்குலத்துக்கு இழுக்குவைத்துப் போய் விட்டாரே. இவருக்கு என்ன பலன் கிடைக்கப் போகிறது என்று உரித்தான பந்துக்கள் சொல்லி மனம் நொந்துகொள்ளுவார்கள். அறப்படித்த மூஞ்சூறு காடிப் பானையில் விழுந்து கொண்டாற்போலப் புத்தி கெட்டுப் புலையனாகி, மாமிசந் தின்ன ஆசைகொண்டு மதிமயங்கிப் படுகுழியில் விழுந்தான் என்று தூஷித்தார்கள்.

1855-ளு பெப்ருவரி மீ 2-உ மெய்ஞ்ஞானபுரம் தேவாலயத்தில் சண்முகநாதன் என்ற பெயரை மாற்றி தாமஸ் இயேசுதாசன் என்றும், உலகம்மைக்கு மேரியம்மாள் என்றும், அவர்கள் பிள்ளைக்கு தேவசகாயம் என்றும் நாம கரணஞ் சூட்டி ஞானஸ்நான தீக்ஷை பெற்றனர்.

இவர் குணப்பட்டுச் சத்தியமார்க்கத்தை யநுசரித்த விசேஷங் கேள்விப்பட்டு நாகர்கோவில் சேகரத்தில் கிறிஸ்துவின் ரக்ஷிப்பைக் கூறி யறிவித்துக்கொண்டிருக்கும் தேவதாச ஐயர் என்னும் மகாத்துமா கட்டமுது கட்டிக்கொண்டு வந்து பார்த்துக் களிப்புற்றுக் கர்த்தருக்கு ஸ்துதிசெலுத்திப் போயினர்.

தாமஸ் ஐயருடைய அபேக்ஷையின் பிரகாரமே மெய்ஞ்ஞானபுரத்தில்தானே வசித்துக்கொண்டு தமிழ் முனிஷி யலுவல் பார்த்துவந்தனர்.

தாமஸ் இயேசுதாச கவிராயருக்கு உண்டான சமாதான சந்தோஷம்.

தாமஸ் இயேசுதாச கவிராயர் சுயஜன மித்திரர்களுக்காகவும் சகோதரர் சகோதரிகளுக்காகவும் மிகவுங் கருத்தாய் ஜெபஞ்செய்துவந்தார். அவருடைய ஜெபங்கேட்கப்பட்டது. முன் வண்ணார்பேட்டையில் குடியிருக்கும்போது கூடிக் கல்வி பயின்றுகொண்டிருந்த சிநேகர்களில் முத்தைய பிள்ளை, தனுக்கோடி இராஜு, மனகாவலப்பெருமாள் பிள்ளை இவர்கள் மூவரும் கிறிஸ்து ரக்ஷகரேயல்லாது வேறு ரக்ஷகரில்லையென்கிற சத்தியத்தைப் பிடித்துக்கொண்டு மறுவருஷத்தில் வந்து அவ்விரக்ஷகர் திருநாமஞ் சூட்டப்பெற்று அவரது மந்தையின் ஆடுகளாயினர்.

தாமஸ் இயேசுதாச கவிராயர் சகோதரர், மைத்துனர், தங்கை குணப்படுதல்.

தாமஸ் இயேசுதாச கவிராயர் வண்ணார்பேட்டை விட்டுப் புறப்படுமுன், தம்முடைய சகோதரர் வள்ளிநாயகம் பிள்ளைக்கு எழுதியிருந்தபிரகாரம், வள்ளிநாயகம்பிள்ளை ராக்கிலாந்து ஐயரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு இடைவழியில் வரும்பொழுதே, அவரும் தமையனார்கூடக் கிறிஸ்து மார்க்கத்துக்குப் போய்விடாமல், காபந்தா யழைத்துக் கொண்டு வரும்படி, கணபதிப்பிள்ளை யனுப்பிய மனுஷன் அவரைச் சந்தித்து அப்படியே அழைத்துக்கொண்டு வண்ணார்பேட்டை வந்து சேர்ந்தான். அவர் வரும்பொழுது தாமஸ் இயேசுதாச கவிராயர் இருந்த வீடு துக்கவீடுபோலப் பந்துஜனங்கள் கூடி அழுது துக்கித்துக்கொண்டிருந்தார்கள். அல்லாமலும் இனி இந்த ஊரிலிருக்கவேண்டியதுமில்லை. மிசியோனைச்சேர்ந்த வேலைகளில் யாதொருவர் இருக்கவுங் கூடாது என்று சொல்லி கணபதிப்பிள்ளையையும், வள்ளிநாயகம்பிள்ளையையும் முனிஷியலுவலை விட்டுவிடும்படி கட்டாயம்பண்ணினதினால், கணபதிப்பிள்ளை முறப்பநாட்டில் போய் இங்கிலீஷ் ஸ்கூல் வைத்துக்கொண்டிருந்தார். வள்ளிநாயகம்பிள்ளை தன்னூருக்குப் போய் விபசாய அலுவல் பார்த்துக்கொண்டிருந்தார்.

இவ்விதமாய்ச் சிலமாதங் கடந்தபின்பு வள்ளிநாயகம் பிள்ளை தமது தமையனாரைப் பார்க்கும்படி, தனிமையாய் மெய்ஞ்ஞானபுரத்திற்குப் போயிருந்தபோது தாமஸ்

இயேசுதாச கவிராயர், தமது தம்பியைப் பார்த்துக் கண்ணீரோடு நம்முடைய சகோதர ஐக்கியமும் போய்விட்டதா? நான் சத்தியமார்க்கத்துக்கு வந்தேனேயன்றி வேறில்லை. நீரு மென்னைப் பின்தொடராமற் போனதென்னவென்று, வெகு உருக்கமாய்ப் பேசியபோது, வள்ளிநாயகம்பிள்ளை மனசு இளகி, நானுங் கிறிஸ்துமார்க்கத்துக்கு வந்துவிடுகிறேனென்று சொன்னார். அதை உறுதிப்படுத்தும் பொருட்டுத் தாமஸ் இயேசுதாச கவிராயர் அவரை தாமஸ் ஐயரிடம் அழைத்துக்கொண்டுபோய்விட்டு, இவருங் கிறிஸ்தவராகச் சம்மதிக்கிறாரென்று சொன்னார். அதற்கவர் வெகு சந்தோஷத்தோடு "எண்ணித் துணிக கருமந் துணிந்தபின், எண்ணுவ மென்ப திழுக்கு" என்ற நாயனார் குறளைச் சொல்லி, இனி இந்த எண்ணத்தை மாற்றக்கூடாதென்று வற்புறுத்திப் பேசினார். அப்பொழுதே வள்ளிநாயகம் பிள்ளை மனதில் அதிகக் குழப்பமுண்டாகி, எண்ணித் துணிக கருமமென்பது மிருக்கிறதேயென்று ஜாடையாய்ச் சொல்லிவிட்டு ஊருக்குத் திரும்பப் போய்விட்டார். இடைவழியில் அவருக்குண்டான மனவேதனை கொஞ்சமல்ல. சகோதரர் நிமித்த மாத்திரம் கிறிஸ்து மார்க்கத்துக்குப் போனால், சமுசாரம் பிள்ளைகள் வரமாட்டார்களென்பது நிச்சயம். சகோதரருக்காகச் சமுசாரத்தை இழந்துவிடலாமா? அவ்வித எண்ணத்தோடு கிறிஸ்துமார்க்கத்துக்குப் போகிறதினால்தான் என்ன பிரயோஜனம். ஆனதால் அம்மார்க்கத்துக்குப் போவதை நிறுத்துவதே சரியென்று தீர்மானித்துக்கொண்டு, கிறிஸ்துமார்க்கத்துக்கு வருகிறேனென்கிற பேச்சை மறுபடியும் பேசாமல் நழுவ விட்டுவிட்டார். இவ்வித தீர்மானத்தோடிருக்கையில், தாமஸ்

இயேசுதாச கவிராயர் சீமையிலிருந்து (Rev. Valpy) வால்ப்பி ஐயர் என்ற ஒரு போதகர் வந்திருக்கிறார், அவருக்கு முனிஷி வேண்டியதாயிருக்கிறது. உமக்குக் கிறிஸ்துமார்க்கத்துக்கு வர மனமில்லாவிட்டாலும் அவசிய மில்லை, முனிஷி வேலை பார்க்கலாம்; உடனே புறப்பட்டு வரவேண்டியதென்று, தம் சகோதரருக்குக் காகித மெழுதி யிருந்தார். அதுவிஷயத்தைப்பற்றி வள்ளிநாயகம்பிள்ளை, தம் மாமனர் முதலியவர்களோடு யோசித்ததில், "கழுத் தளவு நஞ்சானலும் குடித்தாலொழியக் கொல்லாது." உம் முடைய மனசுமாத்திரம் ஸ்திரமாயிருந்தால் முனிஷி வேலை பார்ப்பதினல் பாதகமில்லையென்று சொன்னர்கள். அப்படியே வால்ப்பி ஐயரிடம் முனிஷியாகப் போயமர்ந்தார். மெய்ஞ்ஞானபுரத்திற்கு அடுத்த மானுட்டில் முன் அவர் தகப்பனர் குடியிருந்த வீட்டில்தானே குடியிருந்தார். இயேசு தாச கவிராயரிடத்திலும் ஒரு மன்றாட்டுச் செய்திருந்தார். அதெப்படியென்றால், கிறிஸ்துமார்க்கத்தைப் பற்றித் தம் மிடத்தில் பேசவேண்டாம், பேசுவீர்களானல் நாள்தோறு முங்கள் வீட்டுக்கு வரமாட்டேனென்றார். அப்படியே நான் பேசவில்லை, நீர் வந்துபோயிருந்தால் சரிதான் என்று இயேசுதாச கவிராயர் சொல்லிவிட்டார்.

வால்ப்பி ஐயரோடு வள்ளிநாயகம்பிள்ளை குற்றாலத் துக்குப் போயிருந்தபோது, மேடோஸ் ஐயரும் அங்கே வந்திருந்தார். ஒருநாள் அவர் வள்ளிநாயகம்பிள்ளையைப் பார்த்து, உமக்குக் கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றி நன்றாய்த் தெரியுமே, உம்முடைய தமையனரும் உமக்கு முன்மாதிரி யாகக் கிறிஸ்து மார்க்கத்தை யனுசரித்திருக்கிறார். நீர்

கிறிஸ்து ரக்ஷகரை விசுவாசிக்கிறதற்கு என்ன தடையிருக் கிறதென்று சொன்னார். வள்ளிநாயகம்பிள்ளை ஆம், கிறிஸ்துமார்க்கம் மெய்மார்க்கந்தானென்று நான் ஒருவாறு அறிந்தபோதிலும் விசுவாசம் அதில் பற்றவில்லையே, நான் என்னசெய்யட்டுமென்றார். மேடோஸ் ஐயர் அவரை நோக்கி தேவனொருவருண்டென்று அறிவீரல்லவா என்றார். சந்தேகமில்லாமல் அறிகிறேனென்றார். அப்பொழுது அந்தப் போதகர் அந்தக் கடவுளிடத்தில் உம்முடைய மார்க் கத்தை எனக்குத் தெரிவியுமென்று உண்மையோடு விண்ணப்பம் பண்ணும், அவர் உண்மையை வெளிப்படுத் துவார் என்று சொல்லி யாசீர்வதித்து அனுப்பிவிட்டார். அதன்பின்பு மார்க்க சிரத்தையின்றி, தேவன் சர்வஞான முள்ளவராகையால், நான் உண்மையுள்ளவன் அல்லது உண்மையற்றவனென்பதை யறியக்கூடும். அதற்கு ஒரு மத்தியஸ்தர் வேண்டியதில்லை. நான் உண்மையாயிருக் கையில் அவர் என்னைத் தண்டித்தாரானால் தண்டிக்கட்டும், அதற்கு மேற்பட்ட அறிவு எனக்குக் கொடுக்கவில்லை. எனக்குக் கொடுக்கப்படாத ஒன்றைக் கேட்டால் நான் எவ் வகையாகக் கொடுப்பேன் என்றிவ்வகையாக மனதைத் தேற்றிக்கொண்டார். அப்படிச் சிலகாலங்கழித்து செய்த பாவத்துக்குத்தக்க பரிகாரமில்லாவிட்டால், தேவநீதி யின்படி தண்டனைக்கு எப்படித் தப்பக்கூடுமென்பது அப்போது அவருக்குத் தென்படாமற்போயிற்று.

அவருக்கு விசேஷித்த சிநேகிதரான E. முத்தையா பிள்ளையைக் கண்டு சந்தித்தபோது, ஆதியில் நாம் கிறிஸ்து மார்க்கந்தான் சத்தியமென்று தீர்மானித்துக்கொண்டபடி

நான் அதை யனுசரித்துக்கொண்டேன். நீருமப்படியேன் அனுசரிக்கவில்லை? கிறிஸ்து ரக்ஷகரைத் தவிர வேறே இரக்ஷகர் இல்லையென்று முத்தைய பிள்ளை சொல்ல, அவர் சித்திராக்கினை செய்யப்பட்டு மாண்டவர்கள் தெய்வமாக வழங்குவது வழக்கந்தான், சித்திரவதை செய்யப்பட்ட மதுரைவீரையன்,காத்தவராயன் முதலியவர்கள் பிரபலமான தெய்வங்களாக இந்நாட்டில் வழங்கவில்லையா? அப்படியே கிறிஸ்துவானவரும் சித்திராக்கினை செய்யப்பட்டுத் தெய்வமாக வழங்குகிறார். அல்லாமலும் "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்பது போலப் புஸ்தகங்களை வாசித்துப் பார்த்துமாத்திரம் நிச்சயிக்கலாமா? ரெக்கார்ட்டை மாத்திரம் பார்த்துத் தீர்மானஞ் செய்கிற கோர்ட்டார் நிஜத்தைப் பொய்யென்றும் பொய்யை நிஜமென்றும் சில சமயங்களில் தீர்மானஞ் செய்து போடுகிறார்கள். இப்படிக்கொத்த நியாயத்தினால் மெய்விசுவாச முண்டாவதெப்படி யென்றார். அப்பொழுது முத்தைய பிள்ளை, சாதாரண அறிவுள்ளவர்கள் உம்மோடுபேசினால் அவிசுவாசிகளாகிக் கெட்டுப்போவார்கள் ஆதலால் உம்மோடு பேசுவது நல்லதல்ல வென்றார்.

இவ்விதமாய் வள்ளிநாயகம் பிள்ளை சுயஅறிவை நம்ப ஏதுவில்லாததால், மனச்சாக்ஷிக்கு இணங்க நடப்பது போதும். மத்தியஸ்தர் ஒருவர் அவசியமில்லையென்று தீர்மானித்துக்கொண்டு காலங்கழித்து வருகையில், ஆண்டவர் அவரையெடுத் தாண்டுகொள்ளத்தக்க சமயம் வந்தது.

ஸ்ரீ வில்லிப்புத்தூரிலிருந்து ஓர் வடுக நாயக்கப் பிள்ளையாண்டான் கிறிஸ்தவனானபோது அவனுடைய பந்து ஜனங்கள் வந்து தொந்தரவு செய்யாதபடி அவனை மெய்ஞ்

ஞானபுரத்திற்குக் கூட்டிக்கொண்டு வந்திருந்தார்கள். அவன் பந்துக்கள் அவனைத் தேடிக்கொண்டு, வள்ளிநாயகம் பிள்ளையிருந்த மானட்டிற்கு வந்து பிள்ளையைப் பார்க்க இடமில்லையேயென்று அழுது புலம்பிக்கொண்டிருந்தார்கள். அந்த நாள் செவ்வாய்க் கிழமையாயிருந்தது. பெண்டுகள் வெகு பயபக்தியாய் விரதம் அநுஷ்டித்துவருகிற தைமாசத்தின் செவ்வாய்க் கிழமையாகையால், அந்த விரதம் அநுஷ்டிக்கும்படி வள்ளிநாயகம் பிள்ளை மனைவி அன்றிரவு அடுத்த வீட்டிற்குப் போய்விட்டாள். அவர் ஒன்றியாய் வீட்டின் முன்னிருக்கிற கூடத்தில் படுத்திருக்கையில் அவருக்குள் ஒரு விசேஷித்த சிந்தனை யுண்டானதினால் தூக்கம் ஓடிப் போய்விட்டது.

நன்மை யின்னது தீமை யின்னது என்று பகுத்தறியக் கூடாத சிறுபிள்ளையாகிய இந்த வடுகப் பிள்ளையாண்டான் தன்னாத்துமாவைப் பற்றி இவ்வளவு கவலையுள்ளவனாக இருந்து இத்தனை பந்துக்களையும் விட்டு வந்திருக்கிறான். நானோ ஆத்துமாவைப்பற்றிக் கவலையற்றுச் சிருஷ்டித்தவர் ஒருவரிருக்கிறாரென்று நம்பினாலும் அவர் வழியில் அவரை நினைந்து தொழாமலிருக்கிறேன். அக்கடவுளிருக்கிறது நிச்சயமானதினால் நியாயத் தீர்ப்பும் நிச்சயமாகவே யிருக்க வேண்டும். அக்காலத்தில் நீ நம்மை உண்மையாய்த் தேடித் துதிக்கவில்லை யென்று சொல்லி, நரக தண்டனை விதித்தாரானால் எவ்வளவு நிர்ப்பாக்கியமாயிருக்கும். ஆகையால் இப்பொழுதே அவரைத் தேடுவது அவசியமென்று தீர்மானித்தார். ஆனால் அந்தத் தேவனுடைய மார்க்க மின்ன

தென்று தெரியாதிருக்கையில் அத்தேவனை யெவ்விதமாய்த் தொழுகிறது. நம்முடைய அறிவு மிகவுஞ் சிறியதாச்சே, அவ்வறிவைக்கொண்டு ஒரு விஷயத்தை நிச்சயமென்று தீர்மானித்தாலும் அதுதான் சரியென்று ஒத்துக்கொள்ள இடமில்லை. ஆகையால் தேவன் தாமே யவருடைய வழியைத் தெரிவிக்க வேண்டுமே யல்லாமல் வேறு வழியா யறிவதற் கேதுவில்லை. முன்னொரு சமயத்தில் மேடோஸ் ஐயர், நீர் உண்டென்று நம்புகிற அந்த ஒரே தேவனை நோக்கி உமது மார்க்கத்தை யெனக்குப் போதிப்பியுமென்று மன்றாடும்படி சொன்னாரே. அப்படி மன்றாடிக் கேட்பதுதான் நம்மால் கூடியதென்று தீர்மானித்துக்கொண்டார். அல்லாமலும் எவ்விதமா யவரைத் துதித்து மன்றாடுகிறதென்கிற ஆலோசனை வந்து அவர் ஒரு மார்க்கமு முடையவரா யிராததினாலே தேவனை நோக்கி மன்றாடும் விதமும் ஒரு மார்க்கத்துக்கு முரியதாயிராமல் பொதுவாயிருக்கவேண்டும். ஆகையால் புதிய பாட்டுப் பாடி ஸ்துதித்து மன்றாடுகிறதென்றும், அந்தாதியாக நாளொன்றுக்கு ஒரு பாட்டு வீதம் நூறு பாட்டுப் பாடுகிறதென்றும், அதற்குள் ஆண்டவர் எந்த மார்க்கம் தம் மார்க்கமென்று என்னிருதயத்தில் நிச்சய அறிவுணர்த்து வாரோ அதை நான் அநுசரியாமலிருப்பதில்லையென்றும், என்ன துன்பம் நேரிட்டாலும் அந்தத் தீர்மானத்தை மாற்றுவதில்லையென்றும் பிரதிக்கினை செய்துகொண்டார். அதோடு அந்தப் பாட்டுப் பாட எப்படித் துவக்குகிறது, எப்பொழுது துவக்குகிறது என்கிறதைப்பற்றிய சிந்தனையுண்டாயிற்று. அதுவும் நானாக வொன்றுந் துவக்காமல் தெய்வீக அறிவிப்

பாக இருக்கவேண்டுமென்று யோசித்து, காலமே நித்திரை விட்டு விழிக்கும்போது என் காதில் விழுகிற முதல் வார்த்தையே நான் பாடவேண்டிய பாட்டுக்கு முதல் வார்த்தையாக வைத்துப் பாட ஆரம்பிக்கிறதென்று தீர்மானித்தார். அல்லாமலும், அறிவு தானாக வரக் கூடாதாகையால் ஒவ்வொரு மார்க்கத்தைப் பற்றியும் கூடியவரை கேட்டு ஆராயவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டார்.

இவ்வகையான தீர்மானங்களான பிறகுதான் அவர் மனதிற் சமாதான முண்டாயிற்று. தூக்கமும் வர ஆரம்பித்தது. சுமார் இரவு மூன்று மணிவரை தூக்கமில்லாமலிருந்ததினாலே காலமே ஏழு மணி வரை உறங்கிவிட்டார். அவர் அதிக நேரந் தூங்குகிறதைக் கண்டு அவர் மனைவி வந்து அவரை யெழுப்பி இந்தப் பிள்ளையைப் பிடியுங்கள் வெகுநேரமாயிற்றே யென்று சொல்லிக் கைக்குழந்தையைக் கொடுத்தாள். அவர் அந்தப் பிள்ளையை வாங்கி வைத்துக் கொண்டாலும் அவர் கவனம் முதல் வார்த்தையின்பேரில் ஊன்றியிருந்தது. இந்த என்ற வார்த்தை முதலில் அவர் காதில் விழுந்ததினால் அதை முதலில் வைத்து அப்பொழுதே பாட்டுப் பாட ஆரம்பித்துக்கொண்டார். அதாவது,

கலித்துறை

1. இந்தப் புவிமுற் படைப்புவித் தானொரு வீசனுண்
டந்தப் படியொன்று தானறி வேன்அரு ளாரமுதே
எந்தப் படிதொழு தேத்திட வேண்டுமிவ் வேழைக்குமின்
சொந்தப் பணிவிடை ஈதென்று காட்டுவை தொல்பரனே.

2. பரனேகின் சன்னிதி முன்பல வேதம் பலவிதமாம்
திரனே யறைகுவர் கண்டனே யால்மிகச் சிற்றறிவேன்
உரனே கலங்கினன் உய்வகை தேடி ஒருவழியும்
மரனே யென்வறி யேனருள் வாய்நின்றன் மார்க்கமதே.

3. மார்க்கம் பலவொரு தேவனென் றுங்கொடு வண்பிறவி
சேர்க்கும் பலவென்றுஞ் சொல்வர்சில் லோர்சில ரோர்பிறவி
ஆர்க்குங் கடவு ளொருவ னவனருள் நல்வழியும்
பார்க்கிலொன் றேயென் பராலறி யேனின் பணிபரனே.

இவ்விதமா யொவ்வொரு பாட்டு நாடோறுங் பாடித் தியானித்துக்கொண்டு தம் அலுவல்நேரந் தவிர மற்ற நேர மெல்லாம் மார்க்க ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். வீட்டி லிருக்கும்போது ஆலாசிய புராணமும், அவர் தமையனுர் வீட்டிற்குப் போகும்போது கிறிஸ்து மார்க்கப் புஸ்தகமும் வாசித்துவந்தார். அவர் பிரதிக்கினையை மாத்திரம் யாதொரு வருக்கும் வெளியிடவில்லை.

இயேசுதாச கவிராயர் தம் சகோதரர் கிறிஸ்துமார்க்கப் புஸ்தகங்களை யெடுத்து இரண்டொரு நாளாக வாசித்துக் கொண்டிருப்பதை அறிந்தபோது, நானுங் கூட இருந்து வாசிக்கிறேனென்று சொல்லி முன்னடையாளக் குறிப்பு, வேத உதாரணத்திரட்டு, வேதசாஸ்திரச் சுருக்க முதலிய வைகளை வாசித்துக் கொண்டுவந்தார். இவ்விதமாய் இயேசு தாச கவிராயர் பன்னிரண்டு நாள் வரைக்கும் வாசித்தது மாத்திரமே தவிர முன் அவர் சகோதரர் கேட்டுக்கொண்ட படி மார்க்கத்தைப் பற்றிச் சம்பாஷணையொன்றுஞ் செய்ய

வில்லை. பதின்மூன்றும் நாளில் அப்படி வாசிக்க ஆரம்பிக் கையில், இயேசுதாச கவிராயர் தம் சகோதரரைப் பார்த்து, கிறிஸ்துமார்க்கப் புஸ்தகங்களை வாசிக்கப் பிரியப்படுகிறீரே, அதில் ஏதாவது சந்தேகமுண்டா? சும்மா புஸ்தகங்களை வாசிக்கிறதிலும் இன்னின்ன விஷயங்களில சந்தேகமிருக் கிறதென்று சொன்னால் அதற்கேற்ற ஆராய்ச்சி செய்யலாம். அப்பேர்ப்பட்ட சந்தேகமிருந்தால் சொல்லுமேனென்றார். அதற்கு அவர் சகோதரர், சமஸ்தமும் சந்தேகமாயிருக் கையில் நான் எதைப்பற்றிச் சொல்லட்டுமென்றார். கவி ராயர், ஆயினும் விசேஷித்த காரியமுண்டல்லவா? அதைச் சொல்லுமென, சகோதரர், தேவன் ஒவ்வொருவருடைய உள் ளிந்திரியங்களையு மறியத்தக்க சர்வஞானமுள்ளவராயிருக் கையில் அவருக்கொரு மத்தியஸ்தர் வேண்டியது அவசிய மில்லை. நாம் உண்மையோடு அவரைத் தியானித்து அவருக் குப் பயந்து மனச்சாட்சிக்கு விரோதமின்றிச் சன்மார்க் கத்தில் நடக்கிறதே போதுமானது. மற்றவைகளோ, நம்மு டைய அற்பஅறிவினால் அறிந்து நிச்சயிக்கக் கூடாதவைகளா யிருக்கின்றன. அப்படி நம்மாலறிய இயலாத விஷயங்களை ஏன் அறியவில்லையென்று அவர் நம்மிடத்தில் கேட்க நியாயந் தெரியாதவர் அல்ல. அக்கடவுள் கொடுத்த அறிவின்படி மாத்திரம் நாம் நடந்துகொள்ளக் கூடுமேயொழிய இதுவே நியாயமென்று நிச்சயிக்கக்கூடாத புஸ்தக நியாயங்களையொப் புக்கொண்டு நடப்பதில் பிரயோஜனமென்ன? சாமர்த்தியத் துக்குத் தக்கது உள்ளதை இல்லதென்றும், இல்லதை யுள்ளதென்றும் ரூபிக்கக்கூடும். ஆதலால் மத்தியஸ்தர்

வேண்டுமென்பதை யெப்படி நம்பலாமென்றார். கவிராயர் இது முக்கியமான விஷயந்தான். இதைப் பற்றி நானறிந்த சத்தியத்தைச் சொல்லுகிறேன். வீண் தர்க்கம் பண்ணாமல் சற்றுப் பொறுமையோடு கேளும். நீர் பாவியென்று ஒத்துக்கொள்ளுகிறீ ரல்லவா? குற்றவாளியி னுடைய விண்ணப்பம் அங்கிகரிக்கப்பட மாட்டாதென்பது நீதிசாஸ்திர மாகையால், பாவிகளுடைய விண்ணப்பத் தையும் நீதிபரனாகிய தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பது நிச்சயம். பாவமோ, தானதரும முதலிய எந்த நற்கிரியையினாலும் நிவிர்த்தியாக மாட்டாது. எப்படியெனில், கற்பனையின்படி நடப்பதுதான் தருமம். அப்படி நடக்கத் தவறினதினாலேதான் கற்பனைமீறிப் பாவமுண்டாயிற்று. கற்பனையின்படி நடக்கத் தவறினதினால் உண்டாகிய பாவத் தைப் பின்பு கற்பனைப்படி நடந்தாலும் நிவிர்த்திக்கக் கூடுமா? கற்பனைப்படி சன்மார்க்கமாய் நடந்து தானதருமஞ் செய்ய வேண்டியது மனிதருடைய கடமையாச்சுதே. அக் கடமையைச் சரியாய்ச் செய்து நிறைவேற்றினாலும், செய்ய வேண்டிய கடமைதான் நிறைவேறுமே யொழிய முன் செய்யத் தவறினதினாலுண்டாகிய பாவத்தை நீக்கத்தக்க புண்ணியமாக மாட்டாதே. ஆகையால் பாவத்தை நிவிர்த்தி செய்யத்தக்க புண்ணியம் மனிதருக்கு இல்லவேயில்லை யென்பது தெளிவாய் விளங்குகின்றது. அதனால் எல்லாரும் பாவிகளானார்கள். எந்த மனிதனுஞ் சுயபுண்ணியத்தினால் நீதிமானாக இடமில்லை. ஒருவன், தான் பாவஞ்செய்ய வில்லை யென்று சொல்வானாயினும், ஜென்மப் பாவத்திற்குப் போக்குச்சொல்ல இடமில்லை. ஆகையால் நாமெல்லாரும் பாவிகளாய் நரகதண்டனைக் குட்பட்டவர்களாகவே யிருக் கிறோம்.

தேவன் நீதியிரக்க சமரசராயிருக்கிறதினால் நீதியின்படி நம்மைத் தண்டிக்கவேண்டியதாயிருந்தாலும் இரக்கத்தின்படி நம்மை இரக்ஷிக்கச் சித்தமுள்ளவராய் பரிசுத்த இரத்தஞ் சிந்துதலினால் பாவம் நிவிர்த்திக்கப்படுமென்ற அனாதி தேவ நிருணயத்தின்படிக்கு நீதிக்குக் குறைவில்லாமல் இரக்கம் செய்யும் பொருட்டு, தம்முடைய ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்தில் மனிதாவதாரஞ் செய்யும்படி யனுப்பிச் சமஸ்த மனிதருடைய பாவத்தையுஞ் சுமந்து தீர்க்கும்படி அவரைப் பரிசுத்த இரத்தஞ்சிந்து மொரே பலியாக ஒப்புக் கொடுத்தார். அந்தக் குமாரன் மனிதரால் நிறைவேற்றக் கூடாத சகல கற்பனையுஞ் செய்து நிறைவேற்றிப் பரிசுத்த ராய் தேவனோடு நம்மைச் சமாதானம் பண்ணும்பொருட்டு நம்மேல்வருந் தண்டனையாகிய தேவகோபத்தைச் சகித்து, பாவபரிகாரமாகத் திரு உதிரத்தைப் பொழிந்து, ஜீவனைக் கொடுத்து, நம்மை மீட்டுக்கொண்டார். அவர் மரித்தாலுந் தேவனுகையால் உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக் கெழுந் தருளிப் பிதாவின் வலதுபாரிசத்திலிருந்து உத்தரவாத மத்தியஸ்தராய் நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். அந்த இரக்ஷகரை விசுவாசித்து அவர் மூலமாய்த் தங்கள் பாவங்களை யறிக்கையிட்டுத் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினாலொழிய, நாம் நேரே தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினால் நீதிபரராகிய கடவுள் அவ்விண் ணப்பத்தைக் கேட்கவுமாட்டார். கேட்பது அவருக்கு நீதியுமல்ல. இயேசுக்கிறிஸ்து அன்றியில் மனிதருக்கு இரக்ஷிப்பில்லை. அவரே உலக இரக்ஷகர். ஆகையினாலே தான் அந்த இரக்ஷகர் நானே வழியுஞ், சத்தியமும், ஜீவ னுமாயிருக்கிறேனென்று சொல்லுகிறார் என்று விவரித்துச்

சொல்லி, நீதியையும், இரக்கத்தையும் ஸ்தாபிக்கும்பொருட்டு தன் கண்ணையும் தன் பிள்ளையின் கண்ணையும் பிடுங்கிய அரசன் கதையைச் சொல்லவே, அவருக்கு ஆச்சரியமுண்டாகத்தக்க பிரகாரம் அவர் மனசு மாறி இயேசுகிறிஸ்துதான் இரக்ஷகரென்று பற்றிப் பிடித்துக்கொண்டது. அவர் முன் குறித்திருந்த சந்தேகங்களோ, காணாமுடையாய்ப் போயிற்று. இது தேவனால் தனக்கு வெளிப்படுத்தப்பட்டதென்று சந்தேகமற அவர் இருதயங் குதூகலித்தது. அவர் கிறிஸ்தவனாவதற்கு வேறே யாதொரு தடையு மவர்முன்னின்றதில்லை. அவர் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசிக்கவுமில்லை, உடனே ஜெபம் பண்ணுவோமென்று முழங்காற்படியிட்டார். தாமஸ் இயேசுதாச கவிராயரும் மகா சந்தோஷத்தோடும் தேவ நன்றியறிதலோடும் விண்ணப்பம் பண்ணினார்.

இப்படியாக அவர்களிருவரும் ஜெபம்பண்ணி முடிந்த பின்பு வள்ளிநாயகம் பிள்ளை தாம் நிருணயித்துக்கொண்ட சங்கதிகளெல்லாம் விவரமாய்ச் சொன்னார். அதைக் கேட்டுக் கவிராயர், கர்த்தரே உம்மை யெடுத்தாண்டுகொண்டார் என்று சொல்லி, இது தேவ ஆவியானவருடைய கிரியை யென்று தெளிந்தார்.

அப்புறம் வள்ளிநாயகம் பிள்ளை வெளியரங்கமாய்க் கிறிஸ்தவனாகவேண்டிய விஷயத்திற்குத் தம்மனைவி கிறிஸ்து மார்க்கத்தைக் கனவினும் நினையாதவளாயிருப்பதினால் ஏற்ற சமயம் பார்த்துக் கிறிஸ்து ரக்ஷகரைப்பற்றிப் பேசி அவளையுஞ் சம்மதப்படுத்திக்கொண்டு பிற்பாடு வெளியரங்க கிறிஸ்தவனாகிறது நலமென்று உத்தேசித்து, இன்னும்

நாலு மாசத்தில் வால்ப்பி ஐயர் பனையடிப்பட்டிக்குப் போகிற படியால் அவரோடு தாமும் போய் வாசம்பண்ணவேண்டி யிருக்கிறது. அங்கே பந்துஜனங்கள் கிட்டவில்லை, அவ் விடத்திற்குப் போன பின்பு தம் மனைவியோடு கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றிப் பேசி, அவளையுஞ் சம்மதப்படுத்திக் கொள்ளலாமென்று தமையனுரோடுகூட யோசித்துக் கொண்டார். தாமஸ் ஐயருக்கும் அவர் தம் மனமாறு தலையும், நிருணயங்களையும், சற்றுத் தாமதிக்கிற காரணத் தையும் பற்றித் தெரிவித்தபோது, அவர்களும் மகா சந்தோஷத்தோடு கர்த்தரை ஸ்துதித்து அந்த யோசனை யின்படி நடப்பது நல்லதுதான் என்றார்கள். வால்ப்பி ஐயர் அவர் குணப்படுதலைக் குறித்து ராக்கிலாந்து ஐயருக்கு எழுதியிருந்தார்.

வள்ளிநாயகம் பிள்ளை தமக்குத் துணையாகத் தம் மைத்துனர் கணபதிபிள்ளையுங் கிறிஸ்தவராவாரானல் அதிக சந்தோஷமாக இருக்குமென்று ஒவ்வொரு நாளும் சிந்தித்து ஜெபித்து வந்தார். என்றாலும் தமது குணப்படுதல் கணபதி பிள்ளைக்கு இப்போது தெரியப்படாதென்றும், தெரிந்தால் குழப்பம் நேரிடுமென்றும், தன் தமையனுரிடத்தில் சொல்லி யிருந்தார். கணபதி பிள்ளை சிலகாலத்துக்குப்பின்பு மறு படியும் குருக்கு ஷாங்ஸ் ஸ்கூலில் முனிஷியாக வந்து, பாளையங்கோட்டையில் வசித்துக்கொண்டிருந்தார். அவருக் குள்ளும் தேவ ஆவியானவருடைய கிரியை யுண்டாகிக் கிறிஸ்தவராகும்படி தீர்மானித்திருந்ததை E. முத்தையா பிள்ளை யறிந்து, இயேசுதாச கவிராயருக்கு அது விவரத்தை யெழுதியதோடு உங்கள் தம்பிக்கு இது விவரந் தெரியப்

படாதென்றும் எழுதியிருந்தார். இவ்விதமாய் வள்ளிநாயகம் பிள்ளையும், கணபதி பிள்ளையும், ஒருவரையறியாமல் ஒருவர் கிறிஸ்து மார்க்கத்திற் பிரவேசிக்க வேண்டுமென்றிருந்த காரியம் தாமஸ் இயேசுதாச கவிராயருக்குத் தெரிந்த உடனே இது தெய்வீக சங்கல்பமாயிருக்கிறதென்று ஆச்சரியத்தோடு தமது சகோதரரையு மிட்டுக்கொண்டு வால்ப்பி ஐயரிடத்தில் போய்ச் சொல்லும்போது, அவரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டு, ராக்கிலாந்து ஐயர் பதிலெழுதிய காகிதத்தை யெடுத்து வாசித்தார். "வள்ளிநாயகம் பிள்ளையின் குணப் படுதலைக் கேள்விப்பட்டுக் கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினேன். அவர் மனைவியினிமித்தம் வெளியரங்க மாய் மார்க்கத்தை யனுசரிக்கத் தாமதப்படுகிறதும், தனித்த ஊரில் மனைவியைக் கட்டாயப்படுத்திச் சேர்த்துக்கொள்ளலா மென்று உத்தேசிப்பதும் தகாத காரியம், அவர் தாமதப் படாமலுடனே கிறிஸ்தவனாகவேண்டும்; இதுவே ரக்ஷணிய நாளென்று கர்த்தர் சொல்லுகிறார். அவர் மனைவி பிரிந்து போனாலும் போகட்டும்" என்பதுபோல் எழுதியிருந்தார். இது காரியங்களை யெல்லாம் பற்றித் தாமஸ் ஐயரோடு கலந்து யோசித்து இனித் தாமதஞ் செய்யாமல் கணபதிப் பிள்ளையை யிங்கே யழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று தீர்மானித்து உடனே தாமஸ் இயேசுதாச கவிராயரும் அவர் சகோதரரும் பாளையங்கோட்டைக்குப் புறப்பட்டார்கள். இன்ன காரியத்திற்குப் பாளையங்கோட்டைக்குப் போகிறே னென்று வள்ளிநாயகம் பிள்ளை தம் மனைவியிடத்தில் சொல்ல வில்லை. எல்லாம் வந்து சொல்லுகிறேனென்று சொல்லி விட்டார்.

அன்றிரவி லிருவரும் ஒரு வண்டியில் பிரயாணப்பட்டு மறுநாள் காலமே பாளையங்கோட்டை வந்து சேர்ந்தார்கள். கணபதி பிள்ளையோடு இது காரியத்தைப்பற்றிப் பேசின போது அவர் தகப்பனார் அதிக சுகவீனமாயிருப்பதால் அவருக்குச் சற்றுச் சுகப்படவிட்டுக் கிறிஸ்தவராவது நல மென்பதுபோல யோசித்தார். ஏனென்றால் மகன் கிறிஸ்த வனாகப் போய்விட்டானென்று கேட்கும்போது ஒருவேளை ஏக்கத்தினால் என் தகப்பனாருக்கு ஜீவன் போனாலும் போய் விடுமென்று பயப்படுகிறேன் என்றார். இப்படி யோசித்துக் கொண்டிருக்கும்போது பேரன் புரூக் ஐயர் சடுதியில் மரண மடைந்தாரென்கிற சமாசாரம் வந்தது. இப்படி மனுஷா ளுடைய ஜீவன் அநிச்சயமாகையால் இனி நாம் தாமதஞ் செய்யப்படாது, இன்றிரவே மெய்ஞ்ஞானபுரத்திற்குப் புறப்பட்டுப் போய்விடுகிறதென்று தீர்மானித்துக்கொண்டு கணபதி பிள்ளை இளைய மைத்துனரோடுகூட வீட்டுக்குப் போய்த் தன் மனைவியைத் தனித்த ஓர் அறையில் அழைத்து நானும் இந்த உன்னிளைய தமையனாரும் இன்று கிறிஸ்தவர் களாக மெய்ஞ்ஞானபுரத்துக்குப் புறப்பட்டுப் போகிறோம்; நீயும் கூட வரவேண்டுமென்று சொன்னார். அதைக் கேட்ட வுடன் அந்த அம்மாள் கீழே விழுந்து அழுது புரண்டு கொண்டு நான் வரமாட்டேன், உங்கள் தங்கை கிறிஸ்து மார்க்கத்துக்குப் போய் உலகத்தாரால் கேட்கிற திட்டுப் போதாதா; நானுமப்படிக் கேட்கவா வரவேண்டும் என்றாள். கணவர், திட்டைப்பற்றி நீ கவனிக்கவேண்டியதில்லை. நான் தப்பிதம் செய்கிறவனென்று நீ என்னைப்பற்றி நினைக்கிறாயா?

என்றார். இதுவரை யப்படியில்லை யென்றாள். இப்போது மப்படியே நம்பு, கிறிஸ்து மார்க்கத்தின் சத்தியத்தை இப்போது சொல்லி மெய்ப்பிக்க முடியாது; பின்னாலே மெய்ப்பிக்கிறேனென்று சொல்லிப் பின்னும் பலவகையான புத்திமதிகளைப் பர்த்தா சொன்ன பின்பு, மகா வருத்தத்தோடு நானுங்கூட வருகிறேனென்று சம்மதித்தாள். இவ்வளவு சமாசாரமும் கணபதி பிள்ளையுடைய தாயார் முதலியவர்கள் ஒருவருக்குந் தெரியாது.

அன்று இராத்திரி 11 மணிக்குமேல் எல்லாரும் தூங்கின பின்பு தாமஸ் இயேசுதாச கவிராயரோடு கணபதி பிள்ளையும், கைக்குழந்தையை எடுத்துக்கொண்டு அவர் மனைவியும் , அவள் சகோதரர் வள்ளிநாயகம் பிள்ளையும் கூடப் பிரயாணப்பட்டு மெய்ஞ்ஞானபுரம் போய்ச் சேர்ந்தார்கள். அன்றைய தினம் கிறிஸ்துநாதர் உயிர்த்தெழுந்த பண்டிகையாயிருந்தது. அவ்விடத்திலிருந்து வள்ளிநாயகம் பிள்ளை மானூட்டிலிருக்கிற தன் வீட்டுக்குப் போய்விட்டார். அவர் மனைவி பாளையங்கோட்டைக்குப் போயிருந்தீர்களே எல்லாரும் சுகமா இருக்கிறார்களா? விசேஷம் என்ன? சொல்லுங்களென்று கேட்க, அவர் எல்லாரும் சுகந்தான், மற்ற விசேஷங்கள் நாம் சாப்பிட்ட பிற்பாடு சொல்லுகிறேன் என்றார்.

அப்பொழுது சொன்னால் வருத்தப்பட்டுக்கொண்டு பட்டினி யிருப்பாளென்று நினைத்து அப்படிச் சொன்னார். அப்படியே போஜனஞ் செய்தபின்பு அந்த விசேஷத்தைச் சொல்லவேண்டுமென்று மனைவி கேட்க, அவர், தங்கச்சியும்

மாப்பிள்ளையும் கிறிஸ்து மார்க்கத்துக்கு வந்துவிட்டார்கள். மெய்ஞ்ஞானபுரத்தி லிருக்கிறார்கள்; நாமிரண்டுபேரும் அப்படியே கிறிஸ்து மார்க்கத்துக்குப் போவோம் புறப்படு என்றார். இந்த வார்த்தை பாதி கேட்குமுன்னடிக் கீழே விழுந்து புரண்டு அழுதுகொண்டு இனி நான் ஜீவனை விட்டுக் கொள்வதைத் தவிர உயிரோடிருக்க மார்க்கமில்லை யென்று மனைவி சொல்லிப் பிரலாபித்தாள். உடனே கணவர் அடுத்த வீட்டுக்குத் தெரியும்படி சத்தமிட்டு அழுதையானல் இப்பொழுதே யோடிப்போய் விடுவேனென்று சொன்னதினல் கூக்குரலிட்டு அழவில்லை என்றாலும் அவர் அவள் கிட்டப் போய்ப் பேசும்போது அதிக அழுகைக்கு ஆரம்பிக்கிறதினல் புத்திமதி சொல்லுவதற் கிடமிருந்ததில்லை, கொஞ்சம் ஆறுதலடையவிட்டுப் பேசிச் சமாதானப்படுத்துவோமென்று ஏற்ற சமயம் பார்த்துக்கொண்டிருந்ததுமன்றி வீட்டிலோர் மூலையில் கர்த்தரை நோக்கி முழங்காற்படியிட்டுத் தன் பிரயத்தனத்தை வாய்க்கச்செய்ய வேண்டுமென்று ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார். அதை யவர் மனைவி பார்த்தவுடனே அவளுக்கிருந்த ஆற்றாமை சொல்லிமுடியாது. அவ்வித நிலைமையிலிருக்கையில் பொழுது அஸ்தமனமாயிற்று.

பெருங்குளத்திலிருக்கிற சொக்காரச் சகோதரர் பாளையங்கோட்டையிலிருந்து கணபதி பிள்ளை முதலியவர்கள் புறப்பட்டுவந்த சமாசாரங் கேள்விப்பட்டு வள்ளிநாயகம் பிள்ளையைக் கிறிஸ்து மார்க்கத்துக்குப் போக ஒட்டாதபடி தடுத்துக்கொள்ளும்பொருட்டு உடனே புறப்பட்டு ஓடி மானட்டில் வந்து சேர்ந்து, அவர் வீட்டுக்கு

அடுத்த வீட்டுக்காரரிடத்தில் நடந்த சங்கதியைச் சொல்லிக் கொண்டிருந்தாராம். அதைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த வீட்டுப் பெண்பிள்ளை யொருத்தி புறக்கடை வழியாய் ஓடிவந்து, அவர் மனைவியைப் பார்த்து: நீ சடைந்து போயிருக்கக் காரணமென்ன? உள்ளதைச் சொல்லு, எனக்கும் சங்கதி தெரியுமென்றுளாம். அப்பொழுது அம் மனைவி என் சம்பந்தியும் அண்ணைச்சியும் மெய்ஞ்ஞானபுரத் திற்கு வந்துவிட்டார்களாம் என்று பொங்கிப் பொங்கி அழுது கொண்டு சொன்ன வார்த்தை வள்ளிநாயகம் பிள்ளை காதில் விழுந்தது. உடனே சங்கதியை வெளிப்படுத்தி விட்டபடியால் இனி வீட்டிற்குள்ளிருக்க கூடாதென்று முன் முற்றத்துக்கு வந்தார். வரும்போது பெருங்குளத்தி லிருந்து வந்த சகோதரர் வெங்கிடாசலம் பிள்ளை அவருக் கெதிரே வந்தார். அவருக்கு வழக்கப்படி வந்தன வழிபாடு செய்தபோது, அவர் தமக்கு இந்த சமாசாரம் ஒன்றுந் தெரியாதவர் போலத் தந்திரயாய், தம்பி பாளையங்கோட்டை யிலிருந்து எப்போது வந்தீர், அவ்விடத்தில் எல்லாரும் க்ஷேமமா என்று கேட்டார். ஆம் இன்றுதான் வந்தேன், எல்லாரும் க்ஷேமம் என்று கேட்டதற்கு மாத்திரம் மறுத் தரம் வள்ளிநாயகம் பிள்ளை சொன்னார். நல்லது வடக்கூரில் ஒரு அலுவலிருக்கிறது கூட வாரும் போய் வருவோம் என்று வெங்கிடாசலம் பிள்ளை அவரைக் கூட்டிக்கொண்டு வடக்கூருக்குச் சமீபமாய்ப் போகையில், அவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு தங்கச்சியையும் மாப்பிள்ளையையுமெங்கே கொண்டுவந்து விட்டாய் பாவியென்று கூக்குரலிட்டு அழுதார். வள்ளிநாயகம் பிள்ளை ஆம் அவர்கள் கிறிஸ்தவர்

களாக மெய்ஞ்ஞானபுரத்திற்கு வந்திருக்கிறார்களென்று சொல்ல, நீ யென்ன செய்யப்போகிறாய் சண்டாளாவென்றார். இவர் நானும் அப்படியே போகப் போகிறேனென்றார். நீ போகிறதைப் பார்ப்போம் வாவென்று இவரை யிழுத்துக் கொண்டு போகவே, இது சமாசாரம் தெற்கூர் வடக்கூர் முழுமைக்கும் பிரஸ்தாபமாகி அநேக ஜனங்கள் வள்ளிநாயகம் பிள்ளையை வந்து சூழ்ந்துகொண்டார்கள். அந்த இடம் அவர் பந்துக்களில் ஒருவர் வீட்டுத் தெருச் சாவடியா யிருந்தது. அநேகர் மார்க்கத்தைப்பற்றித் தர்க்கித்தார்கள். சிலர் பரிகாசம் பண்ணினார்கள். சிலர் விட்டுவிடுவோமா பாருமென்றார்கள். இப்படியாக இராத்திரி ஒருமணி வரை யிலும் வாதும் வழக்கும் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த வீட்டுக்காரர் இவரைச் சாப்பிடும்படி கேட்டுக்கொண்டார். இவர்கள் தம்மை விட்டுவிடும் வரைக்கும் சாப்பிடுகிறதில்லை யென்று பிரதிக்கினை செய்துகொண்டதினால் சாப்பிடமாட்டேன் என்று சொல்லிவிட்டார். இப்படிப்பட்ட பிரதிக்கினை யிருந்தால்தான் விட்டுவிடுவார்களென்பது அவர் நோக்கம்.

அந்த ஜனங்களோடு ஓயாமற் பேசித் தொண்டைத் தண்ணீர் வற்றிப் பேசச் சக்தியற்றுப் போனதினால் அயர்ந்து படுத்துக்கொண்டார், அகாலமாய்ப் போய்விட்டதினாலும் அந்த ஊரில் விசேஷித்த எட்டாந் திருநாளானதினாலும் ஜனங்களெல்லாரும் ஒவ்வொருவராய்ப் போய்விடவே, அவரைப் பிடித்துக்கொண்டு போகும்படி வந்திருந்த சகோதரரும் அவரோடுகூட வந்திருந்தவர்களும் வெகுதூரம் நடந்துவந்த அலுப்பினால் சற்றுக் கண்ணயர்ந்துவிட்டார்கள்.

வள்ளிநாயகம் பிள்ளைக்கோ தூக்கம் வரவில்லை. அவர் மெல்ல எழுந்திருந்து பார்க்கும்போது அவரைச் சூழ்ந் திருந்த எல்லாருந் தூங்குகிறார்கள். இதுதான் சமய மென்று நினைத்து, கர்த்தர் இந்தச் சமயங் கிடைக்கச் செய்ததற்காக அவரை ஸ்துதித்துக்கொண்டு சாவடியை விட்டிறங்கிக் கொஞ்சதூரம் மெல்ல நடந்தார். ஒருவரும் அவரைக் காணவில்லை. பிற்பாடு ஓட்டம்பிடித்து உடைங் காட்டு இருட்டுக்குள் புகுந்து, தெற்கூருக்கு வந்து, தம் முடைய சமுசார மெப்படியிருக்கிறாள் பார்ப்போமென்று வீட்டுக்குப் போனபோது, தலைவாசற் கதவு தாள்போட் டிருந்தது. கதவுத்துவாரத்தின் வழியாய்ப் பார்க்கையில் அடுத்தவீட்டு அம்மாள் ஒருத்தி வீட்டுக்கதவைப் பூட்டிக் கொண்டு நிற்கிறாள். அவர் தம் மனைவியாக்குமென்று நினைத்துச் சாடையாய்க் கூப்பிட்டார். அந்த அம்மாள் அவரைத் தம்பி யென்று கூப்பிடுகிற வழக்கப்படி இதோ தம்பியுடைய சத்தம்போலிருக்கிறது என்று சொல்லவே, அடுத்த வீட்டுப் பாக்கியம் பிள்ளை யவரை மாப்பிள்ளை மாப்பிள்ளை யென்று கூப்பிட்டுக்கொண்டு ஓடி வந்தார். இவர் ஓடிப்போய்விட்டார். தம் மனைவியோ இன்னவிடத்தி லிருக்கிறாளென்பது தெரியாது. இனி மெய்ஞ்ஞானபுரத் திற்குப் போய்விடலாமென்று பார்த்தபோது சாலைமரத் தின் இருட்டுப் பயமாயிருந்தது. அப்பொழுது விக்கிரகச் சாமி அந்தச் சாலை துவக்குகிற வடக்கு வீதியில் புறப் பட்டு வந்து நிற்கிறது. அந்தத் தெருவில் வீடுகள் கிடை யாது. வகவெளி. அதற்குள் அவர் தப்பித்துக்கொண்டு போய்விட்ட சமாசாரம் ஊர்ஜனங்களுக்குத் தெரிந்து திரு

வேண்டி வருமே. தேவரீர் அடியானை எப்படி இவர்கள் கைக்குத் தப்புவிக்கக் கூடுமோ அறியேன் என்று அவர் தமக்குள் ஜெபித்துக்கொண்டேயிருந்தார். அங்கிருந்த வர்கள் நடுவில் அந்த வீட்டுக்காரராகிய வீரவாகு பிள்ளை உலாத்திக்கொண்டு நின்றார். மற்றவர்கள் திண்ணையிலும், கட்டிலிலும், எதிர்ப்பக்கத்துப் பலகையின்மேலும் உட்கார்ந் திருந்தார்கள். அச்சமயத்தில் குதிரை வாகனம் சுமந்த கொத்தனொருவன் அந்தச் சாவடியின் தெருப்பக்கத்து அளியோரத்தில் வந்து நின்றான். உலாத்திக்கொண்டு நின் றவர் யார் யாரென்று அவனைப் பார்த்து அதட்டிக் கேட் டார். அவன் பிரமித்துப் பேசாமல் நின்றான். பிள்ளை யவர்கள் வந்து அகப்பட்டார்கள் என்று அவனை எட்டிப் பிடிக்கவே, அய்யா நான் கொத்தனென்றான். ஏன் பேசாமல் நின்றாயென்று அவனை வைது துரத்தினார்.

இவ்வளவு ஜாக்கிரதையாக இவர்கள் இருக்கையில் எவ் விதமாயிவர்கள் கைக்குத் தப்பித்துக்கொள்ளக் கூடுமென்கிற கலக்கத்தோடுகூட, அவர்களில் ஒருவர் வெளியே யெழுந்து போய் நட்சத்திரம் பார்த்து நாலுமணியாயிற்று, இனியொரு வரும் வீட்டுக்குப் போகக்கூடாது, அந்தப் பெண்பிள்ளையின் தகப்பனார் வருகிற நேரமாயிற்று. அவனை அவர் வசத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டு நாமெல்லாரும் வீட்டுக்குப் போக வேண்டுமென்று சொன்னார். நேரமும் விடியப்போகிற தென்று கேட்டவுடனே வள்ளிநாயகம் பிள்ளைக்கு உண்டான கவலை அளவில்லை, ஜெபத்தைத்தவிர அவருக்கு அந்தச் சமயத்தில் வேறே ஆதாரவுமில்லை.

அவர் அவ்வித நிலைமையிலிருக்கையில் உலாத்திக்கொண்டு நின்றவரை வீட்டிற்குள் வந்துவிட்டுப் போகும்படி பூசையாச்சி கூப்பிடுகிறாளென்று ஒரு ஆள் வந்து கூப்பிட்டது. அச்சமயத்தில் ஏதோ ஒரு விசேஷித்த காரியத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். இதோ வீட்டுக்குள் போய்விட்டு வருகிறேன், அதுவரையில் இந்தச் சம்பாஷணையை நிறுத்திவையுங்களென்று சொல்லிவிட்டு உள்ளேயோடிப்போனார்.

வள்ளிநாயகம் பிள்ளை இதுதான் சமயமென்று துணிந்து எழுந்து அங்கிருக்கிறவர்களில் ஒருவர் வெளிக்குப்போகிறது போல், மெல்ல அவர்கள் நடுவே நடந்து மறைவிடத்துக்குப் போய்ப் பின்பு ஓட்டம்பிடித்தார்; ஒருவரும் அவரை யாரென்று கேட்கவுமில்லை, சந்தேகிக்கவுமில்லை. அவருக்கு எதிரே, கோவிலிலிருந்து பள் நாடகம் பார்த்துவிட்டு அநேகம் பெண்பிள்ளைகள் வருகிறார்கள், அவர்களெல்லாரும் அவரை யறியக் கூடுமென்றாலும் அவர் கால் தள்ளாடிக் கொண்டு ஓடுகிறதைக் கண்டு யாரோ குடிகாரனென்று சொல்லிக்கொண்டு விலகிவிட்டார்கள். அவர்கள் நடுவே ஓடிப் பின்பு சாலையிருட்டில்லாத வேறு பாதை கூடி மெய்ஞ்ஞானபுரம் வந்து சேர்ந்தார். அப்போது காலமே ஐந்து மணியிருக்கும். தாமஸ் இயேசுதாச கவிராயரும், கணபதிப் பிள்ளையும், வள்ளிநாயகம் பிள்ளை வருகைக்கு எதிர்பார்த்துக்கொண்டு வசந்தபுரத்துக்குப் பிரயாணப்பட்டுக் கொண்டு நின்றார்கள். ஆண்டவர் அவரைத் துன்பப்படுத்த நினைத்திருந்த ஜனங்கள் கைக்குத் தப்புவித்து இரக்ஷித்த ஆச்சரியமான வகையைக் கேட்டு அவருக்கு ஸ்துதிசெலுத்தி

விட்டு, அவர்களெல்லாரும் வசந்தபுரத்திற்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். அவ்விடத்திற்கு அவர்கள் பந்துக்களில் சிலர் வந்து துக்கித்துப் பேசி தங்களோடு திரும்ப வந்து விடும்படி கூப்பிட்டார்கள். அதற்கு இவர்கள் நீங்கள் இரக்ஷகரையறிந்து, உங்கள் பாவங்களை யறிக்கையிட்டுக் குணப்பட்டுக் கிறிஸ்தவர்களாக வரவேண்டியது கிரமமே யல்லாது நாங்கள் எங்கள் இரக்ஷகரை விட்டு ஒருக்காலும் வரமாட்டோமென்று அவர்கள் கேள்விக்குத் தகுந்த உத்தரவு கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

நாலைந்து நாளுக்குப்பின்பு வள்ளிநாயகம் பிள்ளை தம் மனைவியைப்பற்றி விசாரிக்கும்பொருட்டு மானூருக்குப் போனபோது, அநேகர் அவரைப் பார்க்கும்படி கூடிவந்தார்கள். அவர்களுக்கு அவர் இயேசு ரக்ஷகரைப்பற்றிப் பிரசங்கித்ததுமன்றி அவர்கள் அன்று அவரைப்பற்றிப் பேசிய காரியங்களையெல்லாம் குறி சொன்னதுபோல இன்னின்னார் இன்னின்னபடி பேசினார்களென்று சொன்ன பொழுது அவர்கள் ஆச்சரியப்பட்டு உமக்கு எப்படித் தெரிந்தது என்றார்கள். அவர் இவ்விதமாய் உங்கள் நடுவே யிருந்துதான் எழுந்து போனேனென்று சொல்ல, அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

அவர் தம் மனைவியை விசாரித்தபோது அவள் தகப்பனார் அன்று காலமே வந்து வீட்டுச் சாமான்களெல்லாம் ஒதுங்க வைத்துக்கொண்டு உடனே புறப்பட்டுப் போய்விட்டார்கள் என்று சொன்னார்கள்.

கணபதி பிள்ளையும் அவர் சமுசாரமும் ஒரு மாசம் வரையிலும் வசந்தபுரத்திலிருந்து பின்பு பாளையங்கோட்டைக்குப் போய் அவ்விடத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள். வள்ளிநாயகம் பிள்ளை பரிசுத்தாவியின் பண்டிகையன்று மெய்ஞ்ஞானபுரத்தில் தாமஸ் ஐயரால் ஞானஸ்நானம்பெற்று தாமஸ் அன்ரேணி ஜோதிநாயகம் என்கிற பெயருந் தரித்துக்கொண்டார். தேவ இரக்கத்தினால் அவர் மனைவி இரண்டு வருஷத்துக்குப் பின்பு அவருடன்கூட வசித்திருக்கச் சம்மதித்துப் பின்னுஞ் சில காலத்திற்குப் பின்பு மார்க்கத்தையறிந்து இரக்ஷகரை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றாள்.

பின்னும் மூன்று நாலு வருஷத்துக்குள் மீதியாயிருந்த பழைய நேசர்களாகிய கிருஷ்ண பிள்ளையும் முத்துவேலு பிள்ளை முதலியவர்களும் சத்திய மார்க்கத்தைத் தழுவிக் கிறிஸ்துவின் நாமஞ் சூட்டப்பெற்றனர்.

சீமைக்குப் போய் பட்டம்பெற்றுவந்த ஸ்பிராட்டு ஐயர் (Rev. Thomas Spratt) தாம் தலைமையாயிருந்த திரெயினிங் இன்ஸ்திற்றியுஷனுக்கு (Training Institution) தமிழ் முனிஷியாக தாமஸ் இயேசுதாச கவிராயரைப் பாளையங்கோட்டைக்கு வரவழைத்துக்கொண்டனர்.

இவ்வகையாகப் பாளையங்கோட்டையில், முன் சில காலம் பிரிந்துபோயிருந்த சிநேகிதர்கள் மறுபடியுங் கிறிஸ்தவ சகோதரர்களாகக் கூடி சார்ஜென்று ஐயர் (Rev. E. Sargent) போதனையிழ்தமுண்டு, பக்தியிலும் புத்தியிலும் வளர்ந்து, சமாதான சந்தோஷமுடையவராய் இயேசுவின் திருநாமத்தைத் துதித்துக்கொண்டிருந்தனர்.

தாமஸ் இயேசுதாச கவிராயர் நடபடி.

தாமஸ் இயேசுதாச கவிராயர் ஒவ்வொரு நாளுந் தனி ஜெபம் குடும்ப ஜெபஞ் செய்வதில் தவறமாட்டார். தம்மோடு சந்திக்கிற புறமதஸ்தர்களோடு கூடியவரை இயேசுவின் திருநாமத்தைச் சொல்லாது விடார். தாம் சிவமதஸ்தராயிருந்து இரக்ஷிப்பின் வழிதேடிக் கண்டுபிடித்தவராகையால் கேட்பவர்களுக்கு வெகு தெளிவாய் நியாய சம்பந்தத்தோடு இயேசு ரக்ஷகரையன்றியில் வேறே இரக்ஷிப்பில்லையென்கிற சத்தியத்தை விளக்கிக் காட்டுவார். இந்து மார்க்கக் கோட்பாடுகளுக்குண்டான மூலகாரணங்களை யனேகமாய்க் கண்டுபிடித்து அதன் நோக்கங்களை விவரித்துச் சொல்லி, அது தவறென்று நியாயமெடுத்துக் காட்டுவார். கிறிஸ்தவ வேதாகமத்தில் தேவன் தமது ஒரே பேறான குமாரனை உலக ரக்ஷகராகத் தருவோம் என்று சொல்லிய வாக்குத்தத்தத்தைக் கர்னபரம்பரையாகக் கேள்வியுற்றிருந்த காரணங்கொண்டே, காந்தப்புராணக் கதை கட்டியிருக்க வேண்டுமென்று அதை ரூபித்துக் காட்டுவார். அந்நியரை உபசரிக்கிறதில் எல்லாருக்கும் முந்திக்கொள்வார். சுவிசேஷப் பிரசங்கிகளென்று வருவோர்க்கு அவர் வீடுதான் தங்குமிடம். கல்தேய தேசத்திலிருந்து வந்த கிறிஸ்தவர்களும் அவருடைய பெயர் கேட்டு வந்து அவர் வீட்டில் தங்கினார்கள்.

தந்தார தார பரதார புத்திரனை யாவரையுங் கனம் பண்ணுவார். கோபம் அவரிடத்திற் காண்பது அரிது.

குளிர்ந்த வசனமும், மலர்ந்த முகமும், கனிந்த பக்தியும், பணிந்த நடையும் உள்ளவராய் இயேசு சுவாமியின் அடிச் சுவடு தொடர்ந்து நடந்தார். சங்கீதப்பிரியரா யிருந்ததினல் இரக்ஷா பெருமான் பேரில் அநேக கிருதிகைகள் பாடி அதுகளை வீணை பிட்டில் முதலிய வாத்தியங்களில் வாசித்து ஸ்துதித்துக்கொண்டிருப்பார்.

கிறிஸ்து மார்க்கத்தைத் தூஷித்து சைவ சமயத்தாரு ளொருவர் எழுதிய சைவ மகத்துவம் என்பதற்கு நிராகரண மாகச் சைவ மகத்துவ ஆபாசம் என்னும் பிரசுரமொன் றெழுதி அப்போது வழங்கிய தேசாபிமானி யென்னும் பத்திரிகையில் அச்சிட்டுப் பரப்பச் செய்தனர். இந்துக்கள் கேட்கும் அருங் கேள்விகளுக்கு விடை யெழுதி அச்சிடுவித் திருக்கின்றனர். வாக்கியா லக்ஷணமென்று புதுக் கோட்பா டாக வாக்கியங்களை யெளிதிற் பகுத்துணரத்தக்கதாக வசன ரூபத்தில் ஓரிலக்கண நூல் செய்து அச்சிட்டிருக்கின்றனர். அநேக நூதனக்காட்சியாக இந்துமதமுண்டான காரணங்களை அம்மத சாஸ்திர மூலமாய் அநுமானித்துக் கண்டு குறிப் பிட்டு எழுதிவைத்திருக்கிறூர். இவ்வகையாய் மனமுயற்சி செய்வதிலும் மிக விருப்பமுடையவரா யிருந்தனர்.

அவர் பாளையங்கோட்டைக்கு வந்து நாலைந்து வருஷத் திற்குப் பிற்பாடு வியாபார முயற்சி செய்ய ஆரம்பித்து இங்கிலீஷ் முறையான ஷாப்பு வைத்து வியாபாரஞ் செய்து வந்தார். அவர் நூதனப் பிரியரானதால் இவ்விடந்தில் முன்னில்லாத நூதன வியாபாரங்களுஞ் சேர்த்துச்செய்தனர்.

அவர் செய்த புதுமாதிரிப் பெட்டிவண்டிகள்தான் இப்போது இவ்விடங்களில் வழங்கி வருகின்றன. சென்னபட்டணம் வரையும் அந்த மாதிரியில் பிரியப்பட்டு அநேக பிரபுக்களுக்குப் பாளையங்கோட்டையிலிருந்தே வண்டி செய்து அனுப்பப்பட்டிருக்கின்றது.

"வாணிபஞ் செய்வார்க்கு வாணிபம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்."

என்ற குறள்படி பிறருடைய பொருளைத் தமது பொருளைப் போலப்பாவித்து தேவ பயபக்தியோடு அந்த வியாபாரத்தை நடத்திவந்ததினால் கூடுமானமட்டும் விர்த்தியடைந்து பாவமில்லாத வகையாய் இம்மைக்குரிய சலாக்கியங்களையும் அனுபவித்தனர். இவ்விதமாய்த் தெய்வத்துக்கும் மனிதருக்கும் முன்பாக நிருணயமாக நடந்து வந்ததினால் தேவ தயவும், மனித தயவும் பெற்றவராக வாழ்ந்தனர்.

அவர் தாயாருக்காகச் செய்துவந்த ஜெபமுங் கேட்கப்பட்டது. அவருடைய விருத்தாப்பிய தாயார் வெகுகாலம் தம் பிள்ளைகள் பேரில் விசனமாய் அணியாபரணநல்லூரிலேயே தனித்து வாசம்பண்ணிக்கொண்டு ஆத்துமக் கவலையற்றிருந்தார். அச்சமயத்தில் ஓர் வியாதியுண்டாய் மிகவும் பலவீனப்படுத்திவிட்டது. அதனால் பாளையங்கோட்டையில் வந்து மக்களோடு வசித்துக்கொண்டிருக்கவும், ஆத்துமாவைப்பற்றிக் கவலைகொள்ளவும் நேரிட்டது. 1877-ஆு ஏப்பிரல் மீ 17-உ யில் ஞானஸ்நானம் பெற்று இயேசுவின் மந்தையில் சேர்க்கப்பட்டனர்.

தாமஸ் இயேசுதாச கவிராயருக்கு இம்மகிழ்ச்சி யல்லாமல் இன்னொரு மகிழ்ச்சியு முண்டாயிற்று. இரக்ஷிப்பிற்குத் தூரமாய் விலகியிருந்த அவர் தமையனார் சிவசுப்பிரமண்ணிய கவிராயருடைய பிள்ளைகளில் ஜேஷ்ட புத்திரனாகிய சண்முகசுந்தரம் பிள்ளையும் அவர் நேசித்திருந்த A. S. அப்பாசாமி பிள்ளையோடு இரக்ஷணியமூர்த்தியை யறிந்து விசுவாசித்து ஞானஸ்நான தீட்சை பெற்றனர்.

இத்தியாதி மகிழ்சிறந்தவராய் நாள்தோறும் வேதாகமம் வாசித்துச் சிந்தித்து ஜெபித்து வருகிற வழக்கப்படி 1884—ஷ ஜனுவரி மீ 1-உ வாசிக்க நேர்ந்தது, 1 சாமுவேல் 7-ம் அதிகாரமாயிருந்தது. அதை வாசிக்கையில் 12-ம் வசனத்தில் ஓர் பாகமாகிய இம்மட்டும் உதவிசெய்தார் என்கிற வாக்கியத்தைக் கவனித்து அன்றுவரை ஆண்டவர் செய்துவந்திருக்கிற உபகாரங்களையும், கரைகாணாப் பாவ சாகரத்தினின்று தம்மையும் தமது குடும்ப முழுவதையும் கரையேற்றிய மட்டற்ற அவரது கிருபையையும், அதற்கிசைவாய் நடத்திவந்த ஆச்சரியமான அவரது நடத்துதலையும் நினைவுகூர்ந்து மெய்ச் சமாதானமுள்ளவராய் நன்றியறிதலோடு கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினதுமன்றி தாமாத்திரமல்ல, தமது பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் இந்த விஷயத்தை நினைவுகூரத்தக்கதாக அந்த வசனத்தை ஓர் கல்லில் வெட்டெழுத்தாக வரைந்து தமது ஜெப அறை வீட்டில் நாட்டியிருக்கின்றனர்.

இவ்வண்ணமாய் தாமஸ் இயேசுதாச கவிராயர் குடும்பத்தா ரனைவருடைய ஆத்துமாக்களையும், அவரை யடுத்த

பந்துக்களில் அநேகருடைய ஆத்துமாக்களையும், இஷ்டர்களில் அநேகருடைய ஆத்துமாக்களையும் அவருடைய போதனையினாலும் முன்யாதிரி நடக்கையினாலும் ஆதாயப்படுத்திக் கொண்டனர். அவர்களில் அநேகர் கவர்ன்மென்று உத்தியோகங்களில் உயர்த்தப்பட்டு உலகத்தாரால் மதிப்படைந்தவர்களானார்கள். முன் கிறிஸ்து மார்க்கம் நிசிதமென்றெண்ணிய ஜனங்கள் இக் கிறிஸ்தவர்களின் நடக்கையினாலிப்போது அது பரிசுத்த சன்மார்க்கமென்று வியப்புறும்படி அந்த அற்புத நாதன் கிருபை புரிந்தருளினார். ஏறக்குறைய 35 வருஷத்துக்குள் தாமஸ் இயேசுதாச கவிராயருடைய சுய குடும்ப மட்டும் 85 ஆத்துமாக்கள்போலப் பெருகி யிருக்கின்றது. அப்படியே இஷ்டர்களும் பலுகிப் பெருகியிருக்கின்றனர். இன்னமும் அதிகமதிகமாய்ப் பலுகிப் பெருகும் என்பதற்குச் சந்தேகமில்லை. அவ்வருள் புரிந்த அன்பின் சொரூபிக்கே அனந்த ஸ்துதியும் ஸ்தோத்திரமும் என்றென்றைக்கு முண்டாவதாக.

செல்வமும் யாக்கையும் நிலையுள்ளன வல்லவென்பது இயல்பாகையால் ரெயில்வண்டி வந்ததினிமித்தம் வியாபாரஞ் சேர்த்தப்பாவது கண்டு நஷ்டம் அதிகரிக்குமென்றஞ்சி நிறுத்தப்பட்டது. சோடா உவாட்டர் கைத்தொழில் ஒன்றுமாத்திரம் ஜீவனார்த்தத்திற்காக வைத்திருந்தார். இவ்வுலக வனாந்தரத்தில் துன்ப துயரத்தோடு பிரயாணஞ்செய்து கடந்து நித்திய ஜீவகதி சேரவேண்டுவதால் தம்முடைய மூத்த குமாரன் மரணமடைந்த துக்கமேலிட்டு, பக்கவாதமுண்டாய்

ஒன்றரை வருஷம்போல வீடுமட்டும் நடமாடிக்கொண்டிருந்து, கடைசியாய்ச் சிலகாலம் வீடடங்கிப் படுக்கையில் பலவீனப்பட்டுப் போயிருந்தனர்.

இதுதான் சமயமென்று பிசாசானவன் இவருடைய விசுவாசத்தைக் குலைத்துவிட முயற்சி செய்து பார்த்தான். பாவங்களெல்லாம் மன்னிப்படைந்தபின் அந்தப் பாவங்கள் இப்போது நினைவில் வரவேண்டியதென்ன? என்பதுபோலொத்த சில வீணெண்ணங்களை அவர் மனதில் கொண்டு வந்துவிட்டான். அவ்விஷயங்களைப்பற்றியும் போதகமார்களோடு சம்பாஷித்து மிகுந்த சமாதானமடைந்தார். கடைசியாய் ஓர் சமயத்தில் சூழநின்ற தன் குடும்பத்தார்களையெல்லாம் பார்த்தபோது கண்ணீர்விட்டழுதார். ஏன் கண்ணீர் விடுகிறீர்களென்று அவர் பத்தினி கேட்டபோது, இவ்வளவு குழாங்களும் என்னோடு மோக்ஷத்துக்கு வந்து சேருவார்களா என்று சிந்தித்ததினாலே அழுகை வந்தது என்றார். இயேசு ரக்ஷகருடைய மாட்சிமையைக் குறித்து இடைவிடாது சம்பாஷித்துக்கொண்டிருக்க விருப்பமுற்றவராய் அதைப்பற்றி யொருவரும் என்னிடத்தில் சம்பாஷித்துக்கொண்டேயிருக்கும்படி தரித்திருக்கிறார்களில்லை யென்று மனஸ்தாபப்பட்டுக்கொள்வார். ஆத்தும ரக்ஷிப்பின் சிந்தனையைத்தவிர வேறு சிந்தனை யப்போது அவருக்கிருந்ததில்லை.

இவ்வித பூரண விசுவாசத்தினாலே இயேசுரக்ஷகருடைய திருப்பாதத்தைத் தழுவிப் பிடித்துக்கொண்டு 1890-ஹு அக்டோபர் மீ 2-உ அந்த இரக்ஷகருக்குள் நித்திரையடைந்தார்.

இதை வாசிக்கும் நண்பரே! இந்த ஜில்லாவில் இந்து மதம் புராண காவியங்களும் வேதாந்த சாஸ்திரமும் கற்றறிந்திருந்தும் தாமஸ் இயேசுதாச கவிராயர் தமது சொந்த சிவமார்க்கத்தில் கதியடைய ஓர் வழியுங்காணாது கிறிஸ்து ரக்ஷாபெருமானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறாரென்று அறிந்து கடைப்பிடித்து, விசுவாசித்து, அவருடைய திவ்விய மந்தையிற் சேர்ந்து, அவரது கொடியின் கீழடங்கி அவரடிச்சுவடுகளைப் பின்றொடர்ந்து பாவத்தை வெறுத்துப் பரமபதத்தை நாடிச் சத்தியத்தில் சந்தோஷித்துச் சர்வ ஜாக்கிரதையாய் இவ்வுலக சாகரத்தைக் கடந்து நித்திய மோக்ஷ மகிமைக்குட்பட்டனர்.

இது இவ்விடங்களிலெல்லாருக்குந் தெரிந்தவிஷயமே. ஆதலால் நண்பரே இதைக் கவனித்துப்பாரும். ஆத்தும கதியடைய விரும்பினால் இயேசுரக்ஷகரிடம் வாரும். அவர் தம்மிடத்தில் வருகிறவன் ஒருவனையுந் தள்ளமாட்டேனென்று வாக்குக்கொடுத்திருக்கிறார். அவரையன்றி இரக்ஷிக்கத்தக்க கடவுள் வேறேயில்லை. இது சத்தியம்.

சகலத்தையு மாராய்ந்து பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளென்று கிறிஸ்து சமயங் கற்பிக்கின்றது. யாதொன்று உண்மையும், நன்மையுமானதென்று காணப்படுமாகில் அதைப் பற்றிக்கொள்வதும், தீமையென்று காணப்படுவதை விட்டு விலகுவதுமே விவேகம்.

சாயர்புரம் பிரிண்டிங் பிரஸ்,—11–'54.